பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா: 6.00

# வலம்புரி

VALAMPURI

சங்கு 04 வள்ளுவர் ஆண்டு 2034 பங்குனி 29 சனிக்கிழமை (12.04.2003) தொலைபேசி~ 2223378 ஒலி 114

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது

ராம்கோ சீமெந்து

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

## சொந்த நலன்களுக்காகவாவது

# இலங்கை இன விவகாரத்தில் இந்தியா தலையிட வேண்டும்!

## ஜனாதிபதி வலியுறுத்தியதாக முன்னாள் பிரதமர் குஜ்ரால் பேட்டி





(நமது நிருபர்)

**இலங்கைக்கு மிகவும் நெருங்கியதும்,வரலாற்று ரீதியான தொடர்புகளைக் கொண்டதுமான இந்தியா இருக்கும் போது வேறு பிராந்திய நாடுகள் இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக அதீத ஈடுபாடு காட்டிவருவதை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா விரும்பவில்லை. இலங்கையின் சமாதான முயற்சிகளில் இந்தியாவே அதிக அளவு ஈடுபாடுகாட்ட வேண்டுமென அவர் விரும்புகிறார்.இவ்வாறு முன்னாள் இந்தியப் பிரதமர் ஐ.கே.குஜ்ரால் தெரிவித்துள்ளார்.**

நான்கு நாள் உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டு இந்தியா சென்றிருந்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா முன்னாள் இந்தியப் பிரதமர் ஐ.கே.குஜ்ராலைச் சந்தித்து இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும தற்போதைய சமாதான முயற்கள் தொடர்பாக விளக்கிக் கூறியிருந்ததுடன் அதன் குறைபாடுகளையும் சுட்டிக் காட்டியிருந்தார்.

முன்னாள் இந்தியப் பிரதமர் ஐ.கே.குஜ்ரால் தலைமையில் செயற்பட்டு வரும் தெற்காசிய கூட்டுறவுக்கான "நோமல் கூமன்" என்ற அமைப்புடன் தொடர்புடைய சுமார் 20க்கும் மேற்பட்ட இராஜதந்திரிகள், பேராசிரியர்கள்,முன்னாள் உயர் அதிகாரிகள் ஆகியோர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுடனான சந்திப்பில் கலந்து கொண்டனர்.

இச்சந்திப்பில் இலங்கையின் சமாதான முயற்சியில் இந்தியாவின் பங்களிப்பு தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுடனான சந்திப்பின்போது இலங்கையின்

(10ம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி நாடு திரும்பினார்

(கொழும்பு)

நான்கு நாள் உத்தியோக பூர்வ விஜயத்தை மேற் கொண்டு இந்தியா சென்றிருந்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நேற்று அதிகாலை நாடு திரும்பியுள்ளார்.

இந்தியா சென்றிருந்த ஜனாதிபதி சந்திரிகா இந்தியப் பிரதமர், துணைப் பிரதமர், ஜனாதிபதி,வெளிவிவகார அமைச்சர்,முன்னாள் பிரதமர் ஐ.கே.குஜ்ரால்,தமிழக முதல்வர் ஜெயலலிதா மற்றும் சதீஸ் நம்பியார் ஆகியோரையும் சந்தித்து உரையாடியமை குறிப்பிடத்தக்கது. (ம)

## புத்தளம் மோதல் சம்பவம்

## விசாரணைக்கு உத்தரவு

(புத்தளம்)

புத்தளத்தில் நேற்று முன்தினம் அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனாவின் ஏற்பாட்டில் நடைபெற்ற இடம் பெயர் சேவையில் இடம் பெற்ற கோஷ்டி மோதல் தொடர்பாக பககச் சார்பற்ற விசாரணையை நடத்துமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா உத்தரவிட்டுள்ளார்.

மேறபடி இடம் பெயர் சேவைக்கு வன்னிப் புனர்வாழ்வு அமைச்சர் நூர்தீன் மசூர் வருகை தந்தபோது நாடாளுமன்ற உறுப்பினர் றிசாட் பதியுதீனின் ஆதரவாளர்கள் அவரை உள்ளே வரவிடாது தடுத்துத் தாக்குதல்களை மேற்கொண்டனர். இதையடுத்து அங்கு பெரும் கோஷ்டி மோதல் வெடித்ததுடன் இடம் பெயர் சேவை இடைநிறுத்தப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை,எதிர்வரும் 19ம் திகதி அமைச்சர்களான டாக்டர் ஜயலத்தும் நூர்தீன் மசூரும் பிரதமரைச் சந்தித்துப் பேசவுள்ளனர். அத்துடன் இடை நிறுத்தப்பட்ட இடம் பெயர் சேவையை மீளவும் நடத்துவதற்கான ஏற்பாடுகள் இச்சந்திப்பைத் தொடர்ந்து மேற்கொள்ளப்படவுள்ளது. (த)

## கடத்தப்பட்டவர்கள் பொலிஸாரால் மீட்பு

(திருகோணமலை)

திருகோணமலை மூதூர் தோப்புப் பிரதேசத்தில் அண்மையில் இனம் தெரியாதோரால் கடத்தப்பட்ட ஒரு முஸ்லிம் இளைஞரையும் 6 தமிழ் இளைஞர்களையும் நேற்று மூதூர்ப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

அண்மையில் மூதூர் பொமமாணக் குளத்தில் குளிக்கச் சென்ற முஸ்லிம் இளைஞர் ஒருவர் இனம் தெரியாத நபர்களால் கடத்திச் செல்லப் பட்டதாலும் அதனைத் தொடர்ந்து 6தமிழ் இளைஞர்களை இனம் தெரியாதோர் மூதூர்ப் பகுதியில் கடத்திச் சென்றதாலும் அங்கு பதற்றம் நீடித்தது.

இக் கடத்தல் சம்பவத்தினால்

(10ம் பக்கம்பார்க்க)

## ஈ.பி.டி.பி. உறுப்பினர் ஒருவரை புலிகள் கைது செய்தனராம்

### தப்பி வந்ததாக செய்தியாளர்களிடம் தெரிவிப்பு

(கொழும்பு)

தமது அமைப்பைச் சேர்ந்த உறுப்பினரொருவர் கிளிநொச்சியில் வைத்து விடுதலைப் புலிகளால் கைது செய்யபட்டு,சித்திரவதைக் குட்படுத்தப்பட்ட நிலையில் அங்கு இருந்து தப்பி மீண்டும் தம்மிடம் வந்து சேர்ந்திருப்பதாக ஈ.பி.டி.பி அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

நேற்றுக் கொழும்பில் இவ் விடயம் குறித்து அமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான கே.வி.குகேந்திரன்(ஜெகன்),எஸ்.தவராசா,எஸ்.சிவதாஸன் ஆகியோர் பத்திரிகையாளர் மாநாடொன்றை நடத்தினர். அம் மாநாட்டிலேயே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

அம்மாநாட்டில் புலிகளால்

(10ம் பக்கம்பார்க்க)

## அமைச்சர் மொறகொட கோபி அனானைச் சந்திப்பார்

(கொழும்பு)

பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் கோபி அனானை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

எதிர்வரும் 14ம் திகதி வாஷிங்டனில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் முன்னோடிக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக அமெரிக்கா சென்றுள்ள அமைச்சர் அதற்கு முன்பதாக நியுயோர்க்கில் கோபி அனானைச் சந்தித்துப் பேசவுள்ளார்.

இச் சந்திப்பில் இலங்கையின் சமாதான முயற்சிகளின் தற்போதைய நிலை குறித்தும்,வாஷிங்டனில் நடைபெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளின் முன்னோடிக் கூட்டம் பற்றியும் அமைச்சர் விளக்கிக்கூறவுள்ளார். (த)

## இலங்கையின் சமாதானத்துக்கு உதவ அமெரிக்கா தயாராக உள்ளது

### அமெரிக்க பிரதி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

(நியுயோர்க்)

இலங்கை அரசாங்கத்தின் சமாதான நட்வடிக்கைகள் பொருளாதார மறுசீரமைப்புத் திட்டங்கள் குறித்து தாம் மகிழ்ச்சி அடைவதாகவும் அவை குறித்து மிகுந்த நம்பிக்கை கொண்டிருப்பதாகவும் அமெரிக்க பிரதி இராஜாங்க அமைச்சர் றிச்சாட் ஆம்டேஜ் தெரிவித்துள்ளார்.

பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட நேற்று முன்தினம் வாஷிங்டனில் பிரதி இராஜாங்க அமைச்சர் ஆம்டேயை அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தில் சந்தித்து உரையாடினார்.

இச் சந்திப்பின் போதே ஆம்டேஜ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையின் சமாதான நடவடிக்கைகளில் அமெரிக்கா மிகுந்த அக்கறை கொண்டுள்ளது.சமாதானம் ஏற்பட வேண்டுமென்பதையே அமெரிக்கா விரும்புகின்றது.

இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கும் பொருளாதார அபிவிருத்திக்கும் தேவையான உதவிகளையும முழுமையான ஆதரவினையும் அமெரிக்க அரசாங்கம் இலங்கைக்கு வழங்குவதற்கு தயாராகவே உள்ளது.

ஈராக் யுத்தம் இடம் பெற்று

(10ம் பக்கம் பார்க்க)

## யுத்த நிறுத்த மீறலைத் தவிர்க்க அரசு திட்டவரைவு சமர்ப்பிப்பு

(கொழும்பு)

இலங்கை கடற் பிராந்தியத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் யுத்த நிறுத்த மீறல்களை தவிர்ப்பதற்கான திட்டமொன்றை இலங்கை அரசு தயாரித்துள்ளது.

அரசினால் தயாரிக்கப்பட்டுள்ள இத் திட்டம் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவூடாக விடுதலைப் புலிகளுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதென்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு,திருகோணமலை கடற பிராந்தியங்களில் அண்மை யில் இடம் பெற்ற யுத்த நிறுத்த மீறல்கள் தொடர்பாக யுத்த நிறுத்தக கண்காணிப்புக்குழுவினர் தயாரித்த அறிக்கைகள் விடுதலைப் புலிகளி

(10ம் பக்கம்பார்க்க)

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# சத்தி,சிவம் ஒன்றான தன்மையினைக் காட்டி சித்தம் தெளிய வைத்தவர் சிவயோக சுவாமிகள்

**கொழும்புத்துறை யோக சுவாமிகள் குருபூஜை தினம் இன்று**

**மா.க. ஈழவேந்தன்**
**கொழும்புத்துறை**

ஆன்மீகம் என்றால் இந்தியா என்று கூறுமளவுக்கு ஆன்மீகத்தோடு இணைந்த வாழ்வுதான் இந்தியமக்களின் வாழ்வு என்று பொதுவாகக் கூறப்படுவது வழக்கம்.இந்தியாவின் ஓர் அங்கமாக விளங்கும் தமிழகமும் அன்று தொட்டு இன்று வரை ஆன்மீக வாழ்வை வலியுறுத்திய அடியார்கள் பலரைத் தந்துள்ளது.தமிழகம் ஏறக்குறைய 55,000 சதுர மைல்கள் கொண்ட நிலப்பரப்பு அங்கு காலம்தோறும் பக்திப்பாடல்கள் பெருக்கெடுத்து ஓடும். எனவே தான் 'பக்திக்குரிய மொழி பைந்தமிழ்' என்று தமிழால் உலகாண்ட தனிநாயகம் அடிகளாரும் வியந்து போற்றுகிறார். இலங்கையின் நிலப்பரப்போ 25,000 சதுர மைல்களாகும்.இந்த இலங்கைத் தீவில் கூட கதிர்காமம் உட்பட பல்வேறு தலங்கள் சார்ந்த பகுதிகளில் காலத்துக்குக்காலம் 'ஞாலத்தை ஆளும் ஞானிகள்'தோன்றியுள்ளனர்.

## ஈழத்தில் ஞான பரம்பரை

ஈழத்தில் ஓர் அங்கமாக விளங்கும் யாழ்ப்பாணக்குடாநாட்டில் பரப்பளவு ஏறக்குறைய 3,500 சதுரமையில்களாகும்.தனியாட்சி நடத்தும் சிங்கப்பூரின பரப்பளவோ இதைவிட குறுகியது. யாழை வாசித்து யாழ்ப்பாணத்தை பாணன் பரிசாகப் பெற்றான் என்பது மரபு வழியாக வந்த கதையாகும்.இந்த யாழ்ப்பாண மக்களிடையே இசையுணர்வும் இறையுணர்வும் இணைந்திருப்பதைக் காணலாம்.யாழ்ப்பாணம் பெரிய கடைப்பகுதியில் கடையிற்சாமி என்று ஒருவர் வாழ்ந்த வரலாறு உண்டு.இக்கடையிற்சாமியாரால்ஆட்கொள்ளப்பட்டவர் தான் நல்லூர்தேரடியில் காட்சி அளித்த விசர்ச்செல்லப்பா அடிகள் விசர்ச்செல்லப்பாவினால் ஆட்கொள்ளப்பட்டவர் நம் கொழும்புத்துறை யோகசுவாமிகள்.. இவரை இலுப்பையடிச்சாமியார் என்றும் அழைத்தனர். விசர்ச்செல்லப்பா எப்படித்தன்னை ஆட்கொண்டார் என்பதை யோகசுவாமிகள் 'எங்கள் குருநாதர்'என்ற தலைப்பில் 10 பாடல்களில் எழிய தமிழில் ஏற்ற மிகு சொல்லாட்சியோடு பக்திசுவை நனிசொட்டஎமக்கு உகந்தளித்துள்ளார்.



கொழும்புத்துறை யோகசுவாமிகளின் பிறப்பிடம் மாவிட்டபுரம். தநதையார் அம்பலவாணர் தாயார் சின்னாச்சிஅம்மை.இவர் 1873ஆம் ஆண்டு பிறந்து1964ல் தனது 91வது ஆண்டில் உலக வாழ்வை நீத்தார். அவரின் ஆச்சிரமத்துக்கு அருகிலஇருந்த கொழும்புத்துறை சைவத்தமிழ் பள்ளியில் நான் கல்வி பயின்றேன்.இப்பள்ளிக்கூடம் ஒரு முறை தீப்பற்றி எரிந்த பொழுது அதனை அணைக்க யோகசுவாமிகள் ஓங்கிக்குரல் எழுப்பித்துடிப்போடு ஆற்றிய பண்பி என் கண்களில் இன்றும் நிழலாடுகிறது. ஒவ்வொரு நாளும் மாலையில் அவரின் ஆச்சிரமம் சென்றுஅவர் சொல்லித்தர சிவபுராணத்தை பாடிப் பக்தியில் முழ்கினேன்.அந்த சிறியஆச்சிரமத்தில் பல்துறை அறிஞர்கள் பலவேறு அரசியல் வாதிகள்,சாமானிய மக்கள் எண்பலர் கூடி சிவபுராணத்தைப் பாடி மகிழ்வோம். நான் ஒரு காலத்தில் நோய்வாய்ப்பட்டிருந்த வேளை,ஒரு நாள்சடுதியாக என்னை அழைத்துஎன்தலைமேல்தன் பாதத்தை வைத்து 'எல்லாம் சரிபோடா' என்று கூறினார்.

அவர் ஒரு முறை பலவிடயங்களை பேசிக்கொண்டிருந்த போது 'இந்த உலகத்தில் புத்தன் பிறந்த நிலையிலும்,யேசுபிறந்த நிலையிலும்,முகமதுநபி பிறந்தநிலையிலும் உலகம் கெட்டுத்தானே கிடக்கிறது' என்று கூறினார்.நான் சிரித்தபடி 'இவர்கள் தோன்றாவிட்டால் உலகம் மேலும்கெட்டிருக்கும்' என்று சொன்னேன் அவர்சிரித்தபடி'நீ சொல்லுவதும்சரிதான்' என்றார்.

## சிவதொண்டன்

இப்படி தெய்வ உணர்வுள்ள ஒரு மனிதன் எம்மத்தியில் நடமாட அந்த நடமாடும்தெய்வத்தோடு உரையாடி உறவு பூணும் வாய்ப்பு கிடைத்தமையை அனறு நான் முழுமையாக உணரா வட்டாலும் இன்று அதனை நுகர்ந்து உவகையுறும் நிலையில் இருக்கிறேன்.அவர் எமக்கும்,எம் வழித்தோன்றல்களுக்கும் விட்டுச் சென்றதலையாய படைப்பு நற்சிந்தனையாகும். அதில் அடங்கியுள்ள ஒவ்வொரு பாடலையும் மீள மீளப் படிக்கின்ற போது புதுப்புது கருத்துக்கள் தோன்றி எம்மை மெய்சிலிர்க்க வைக்கின்றன. அது உண்மையில் மெய்விளக்க கருவூலம்-தமிழின் தனிப்பெரும் சொத்து. அவர் தலைமையில் வெளியான சிவ தொண்டன் இதழ் இன்றும் தொடர்ந்து வளிவருகின்றது.இவ்விதழ் அவரின் மறைந்தும் மறையாதபெருமையை எமக்கு நினைவூட்டிய படி விளங்குகிறது. அவரைப்பற்றி திருமதி நவரெத்தினம்,பெருந்தகை சோல்பரியின் மகன் மற்றும் ஒரு சிங்கள நண்பன் உட்பட பலர் எழுதிய வரலாற்று நூல்கள்,அவர் வாழ்வைப பற்றி தந்த விளக்கங்கள் தமிழருககுக்கிடைத்த தலையாய செல்வங்கள்.காவிஉடைஉடுத்து, கானகம் சென்று வாழ்வது தான்துறவறத்துக்கு உரிய இலக்கணம் என்பதை உடைத்தெறிந்து அழகான முடிதரித்து கம்பீரமான தாடியைதாங்கி, கவர்ந்திழுக்கும் ஞானக் கண்களோடு மறக்கமுடியாத தோற்றப் பொலிவோடு வெள்ளைவேட்டியோடு நடமாடியதுறவிதான்யோகசுவாமிகள்.

## வழிபாடுசெய்தல்

'என் கடன் பணி செய்து கிடப்பது தனகடன் அடியேனைத் தாஙகுதல்' என்பது 7ஆம்நூற்றாண்டில் வாழ்ந்த அப்பரின் அருள்மொழி.இவ் அருள்மொழிக்கு வடிவம் கொடுத்து எம்மிடையே 91ஆண்டுகள் நிறைவாழ்வு வாழ்ந்து நித்தமும் எம்பிரானுடைய கோயிலை எப்படி வழிபட வேண்டும் என்று வழி காட்டி வெளி உலகத்துக்கு மறைந்தவர் போல் தோன்றினாலும் எமமிடையே என்றும்உயிரூட்டிவாழ்பவராக விளங்கியவர் யோகசுவாமிகள்.

எமதமிழர்ஆண்டவனின் உண்மைத் தன்மையைஉணராத நிலையில் வீண் செலவு செய்து தம் வாழ்வைப் பொருளற்றமுறையில் கழிப்பதை அவர்கண்டித்துஅவர்களை ஆட்கொள்ள முயல்கிறார். அவருடைய பின்வரும் சொற்கள் தமிழ்மக்களைக்குறிப்பாக யாழ்பாணத் தமிழமக்களை அப்படியே படம்பிடித்துக்காட்டுகிறது.

'வித்தாரமாகக் கதைபேசிக் கொள்ளுவோம், வீணருடன் கூடி விளையாடிக் கொள்வோம், சத்தி சிவம் ஒன்றான தன்மையைக் காண்கிலோம்,சாதனையால் வேதனையைத்தீர்க்கிறோமில்லை'.

அகங்காரமாக ஆடையணிந்து கொள்வோம்.அங்கும் இங்கும் எங்கும் அலைந்து திரிகுவோம்.கலங்காத நன்நெறியிற் செல்கிறோம். இல்லைக் கந்தா! முருகா! என்று கத்திக் கொள்வோம்.

24.3.1964ல் தனது 91வது அகவையில் எம்மை விட்டு அவர் பிரிநதார். அந்த மறைவுச்செய்தியை தினகரன் தலைப்புச்செய்தியூடாக உலகிற்கு அறிவிக்கும் வாய்ப்பு அடியேனுக்குகிடைத்தது.அதுவும் எனககுக்கிடைத்த பெரும் பேறுதான் ஆண்டுகள் பலஉருண்டோடிலும் அவர் எம்மோடு வாழ்கிறார் என்ற உணர்வோடுதான் நாம் வாழ்கிறோம். அவரின் ஆச்சிரமத்தை சிங்கள இராணுவம் கைப்பற்றி அங்கு குடிகொண்டுள்ளது. அவரது ஆசசிரமத்தைகைப்பற்றலாம்.அவரது அகத்தை ஆன்மீக உச்ச நிலையை யாரால் கைப்பற்றமுடியும்?

'பஞ்சம்படை வந்தாலும்
பாரெல்லாம் வெந்தாலும்
அஞ்சுவோமோ நாங்களெடி-கிளியே
ஆறுமுகன் தஞ்சமெடி'

எனறு அறிவுறுத்தியவர் நம் அடிகளார். 'அஞ்சுவது ஒன்றுமில்லை. அஞ்சவருவதும் ஒன்றுமில்லை' என்பது அப்பர் அருள் மொழி. அப்பர் வழிவந்த யோகசுவாமிகளின் அருள்மொழியும் அதுதான். நெஞ்சம் நிறைந்த யோகசுவாமிகள் புகழ் வாழ்க.

### இன்று கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் கதிரமலைச்சிவன் ஆலய வருடாந்த உற்சவம் இன்று சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து14 தினங்கள் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 12,13ஆம் திகதிகளில் முறையே ஆலயத்தின் தேர்,தீர்த்த உற்சவங்கள் இடம் பெறவுள்ளன. (உ)

### முன்னோடி வகுப்பு

(சுண்டுக்குளி)

எதிர்வரும் 30ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் முதல் தடவையாக தமிழில் இடம்பெறவுள்ள கரபந்தாட்ட மத்தியஸ்தர் பரீட்சைக்கான முன்னோடி வகுப்பு ஒன்று, இன்று மு.ப. 10 மணிக்கு யா/சென்ஜோன்ஸ் கல்லூரியில் , சங்கத்தலைவர் கப்ரின் டி.ஏ.எம்.குணசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

கடந்த மாதம் சென்ஜோன்ஸ் கல்லூரியில் இடம்பெற்ற கரபந்தாட்ட பயிற்சி முகாமில் பங்கேற்ற அனைவரையும் இந்த முன்னோடி வகுப்பில் கலந்து கொள்ளுமாறு சங்கச்செயலாளர் கே.மனோகரன் கேட்டுள்ளார். (உ-110)

### தகரக் கொட்டகை

(வேலணை)

வேலணை சாட்டி இந்து மயானம், துறையூர் மயானம் மற்றும வேலணை மேற்கு இந்து மயானம் ஆகியவற்றிற்கு வேலணை பிரதேச சபையினால் தகரக் கொட்டகைகள் அமைக்கப்பட்டுள்ளன. (உ-47)

### பாடசாலைக்கு பாண்ட் இசைக்கருவி

(ஆனைக்கோட்டை)

புங்குடுதீவு மகாவித்தியாலயத்திற்கு ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான பாண்ட் வாத்தியக் கருவிகளை பன்முக வரவு செலவுத் திட்டத்தின்கழ் ஊர்காவற்துறை பிரதேசசபை வழங்கியுள்ளது. (உ-201)

### அட்டகாசம்

(கோப்பாய்)

இருபாலைச் சந்திப் பகுதியிலும், சுற்றுப் புறங்களிலும் மது போதையில் நிற்பவர்களின் அட்டகாசங்கள் அதிகரித்து வருவதாகத் தெரிய வருகின்றது. இச் செயற்பாடு காரணமாக குறிப்பாக சைக்கிள், மோட்டார் சைக்கிள்களில் செல்வோர் வீதிப் போக்குவரத்தில் பலத்த இடையூறுகளை எதிர் நோக்க வேண்டியுள்ளது. (உ-79)

# ஆயுத அரசியல் பலங்களை புலிகள் பெருக்குகின்றனர்

**எதிர்க் கட்சித் தலைவர் குற்றச்சாட்டு**

சார்ஸ்நோய் பாதுகாப்பு

# சத்திர சிகிச்சை முகமூடிகள் இலங்கைக்கு அன்பளிப்பு

(கொழும்பு)

சார்ஸ் நோயிலிருந்து பாதுகாப்பைப் பெற்றுக்கொள்வதற்காக சுமார் 5ஆயிரம் சத்திரசிகிச்சை (முகமூடிகளை உலக சுகாதார ஸ்தாப

கான பரிசோதனை நடத்தப்படும் இடங்களுக்கும் முல்லேரியா ஐ.எச் வைத்தியசாலைக்கும்வழங்கப்படவுள்ளன.

இதேவேளை, இலங்கையில்

(கொழும்பு)



தமிழீழ விடுதலைப்புலிகள் யுத்த நிறுத்த உடன்படிக்கையினையும் மனிதஉரிமைகளையும் மீறி வருகிறார்கள் என எதிர்கட்சித் தலைவர் மகிந்தராஜபக்ஷ குற்றம் சாட்டியுள்ளார்.

கண்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவம்ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அந்நிகழ்வில் தொடர்ந்து பேசிய எதிர்க்கட்சித்தலைவர் மகிந்த ராஜபக்ஷ,

உலகிற்கு தாம் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளோம் எனக்கூறிக் கொணடும்போர்நிறுத்த உடன்படிக்கையினை தமக்கு சாதகமாக பயன்படுத்திக்கொண்டும் தமக்கு தேவையான ஆயுதம் மற்றும் அரசியல் பலங்களைப் பெருக்குவதில் புலிகள் முனைந்து வருகின்றனர்.

வடக்குக்கிழக்குப்பகுதிகளில் இராணுவ உளவுப்பிரிவைச்சேர்ந்த பலர் அண்மையில் கொல்லப்பட்டனர். இதற்கு தமிழீழ விடுதலைப்புலிகளே காரணம்.

தமிழ் சிங்கள புத்தாண்டுக்கு முன்னர் இராணுவ உளவுப்பிரிவில் உள்ளவர்களை தமிழீழ விடுதலைப்புலிகள் கொலை செய்வதற்கு திட்டம்தீட்டியுள்ளனர் என தகவல்கள் கிடைத்துள்ளன.

ஐக்கிய தேசிய முன்னணி அரசு இவற்றினை கவனித்துக்கொண்டு ஒன்றும்தெரியாததுபோல் இருந்து வருகிறது.

இதனால் இலங்கை இராணுவத்திற்குப் பாரிய இழப்பு ஏற்படும் என அவர் எச்சரித்துள்ளார். (உ-8)

முகமூடிகளை உலக சுகாதார ஸ்தாபனம் இலங்கைக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

உலக ஸ்தாபனத்தின் இலங்கைக்கான வதிவிடப் பணிப்பாளர் டாக்டர் கான் இன் டுன் இலங்கை சுகாதார அமைச்சின் கேட்போர் கூடத்தில் வைத்து சுகாதார அமைச்சர் தயாரட்ணவிடம் இவ் முகமூடிகளை வைபவரீதியாக கையளித்தார்.

அத்துடன் பணிப்பாளர் கான்இன் டுன்விசேடமாக தயாரிக்கப்பட்ட 156சார்ஸ் நோய் முகமூடிகளையும் இலங்கைக்கு வழங்கியுள்ளார்.

இம்முகமூடிகள் சார்ஸ்நோய்க்

இதேவேளை, இலங்கையில் உள்ள முக்கியத்துவம் வாய்ந்த கொழும்பு,காலி,திருமலை, காங்கேசன்துறை ஆகிய இடங்களில் உள்ள துறைமுகங்கள் மற்றும் விமானநிலையங்களில் பணியாற்றுபவர்களை இது விடயத்தில் மிகவும் அவதானமாக நடந்து கொள்ளுமாறும் சுகாதாரஅமைச்சு கேட்டுள்ளது.

மேலும்,இலங்கையில் சார்ஸ் நோய் பரவாதிருப்பதற்கான சகல நடவடிக்கைகளையும் துரிதமாக தாம் மேற்கொண்டு வருவதாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (உ-10)

## வட்டுக்கோட்டை

# வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியர்.

(சுதுமலை)

வலிமேற்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள வட்டுக்கோட்டை கிராமிய வைத்தியசாலைக்கு இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் நிரந்தர வைத்திய அதிகாரி ஒருவரை யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் நியமித்துள்ளார்.

மிகவும் பின்தங்கிய மக்கள் வாழும் பகுதியில் உள்ள இவ் வைத்தியசாலைக்கு கடந்த ஐந்து மாதங்களுக்கும் மேலாக நிரந்தர வைத்திய அதிகாரி ஒருவர் இல்லாமையால் கிழமையில் மூன்று தினங்கள் மட்டுமே மாலை வேளையில் இவ்வைத்தியசாலை இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ் வைதியசாலையில் பிரசவ விடுதி உள்ளதால் நிரந்தர குடும்ப நலசேவை உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்படவுள்ளதாக வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ-252)

### பொதுச்சபைக்கூட்டம்

(அளவெட்டி)

மல்லாகம் பலநோக்குக் கூட்டுறவுச்சங்க விசேடபொதுச்சபைக் கூட்டம் எதிர்வரும்19ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்குஅளவெட்டி மகாஜனசபை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (உ-83)

# விமான நிலையவிஸ்தரிப்பால் பொதுமக்கள் மீண்டும் பாதிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு விமானநிலைய விஸ்தரிப்பால் பாதிக்கப்பட்டு மாற்றிடங்கள் வழங்கப்பட்ட மககள் மீண்டும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு விமான்நிலைய விஸ்தரிப்பு காரணமாக பாதிக்கப்பட்ட குடும்பங்களில் ஒரு தொகுதியினருக்கு திமிலைத்தீவுப் பகுதியில் 20பேர்ச் நிலப்பரப்பு காணி வழங்கப்பட்டது.

ஆனால் இக்காணிகளில் பத்துப் பேர்ச்சை வீதி அபிவிருத்தி என்ற கொள்கையில் மீண்டும் சுவீகரிப்பதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கை எடுத்து எல்லைக் கற்களையும் நாட்டியுள்ளது.

இதனால் ஏற்கனவே பாதிக்கப்பட்ட குடும்பங்கள்,அதற்காக பெற்ற இழப்பீட்டுத்தொகையில் இருந்து நிர்மாணித்த வீடுகளின் ஒரு பகுதியை மீண்டும் உடைக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபரிடம் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் முறையிட்டுள்ளன.

1985ஆம் ஆண்டு அவசரகாலச் சட்டத்தின் கீழ் விமானநிலைய விஸ்தரிப்புக்காக சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்கு பதிலாக திமிலைத்தீவு டானியஸ் சதுக்கத்தில் பதில் காணிகள் வழங்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (உ-8)

# ஜனநாயகத்துக்காக எதையும் இழக்கத் தயாராய் இருந்தேன்

*விடுவிக்கப்பட்ட பகுதியில் ஓர் ஈராக்கியர் கூறியது*

(பஸ்ரா)

கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலையில் ஹெய்டர் என்ற பஸ்ரா நகரவாசி மிக ஆர்வத்தோடு உலாவச் சென்றார். 12 வருடங்களாக அவர் தம் வீட்டை விட்டு பகிரங்கமாக வெளியில் வந்ததேயில்லையாம்.

ஜனநாயக ஆதரவு அமைப்பொன்றின் உறுப்பினரான அவர் தனது காதலியை 6 ஆண்டுகளாகக் காணவில்லையென்று கவலை கொண்டுள்ளார்.

பஸ்ராவில் சதாமின் ஆட்சி கவிழ்ந்துவிட்டது என்று கேள்விப் பட்டவுடன் படித்த சமூகங்களைச சேர்ந்த குடும்பத்தவர்கள் கலகலப்பாக கதைத்துக் கொண்டு வீடுகளில் இருந்து வெளியில் வந்தார்கள்.

சதாம் என்னிடமிருந்த எல்லாவற்றையும் அபகரித்துவிட்டார். ஒன்றைத் தவிர அதுதான் ஜனநாயகத்திற்கும் சுதந்திரத்திற்குமான எனது எதிர்பார்ப்பு என்று கூறினார் 28 வயதான ஹெய்டர்.

ஹெய்டர் தனது தந்தை 1991ஆம் ஆண்டு ஆட்சியாளர்களால் பிடித்துச் செல்லப்பட்டதையடுத்து ஜனநாயகத்துக்காகப் போராடத் தொடங்கினார். அவரது தந்தை வெளிநாட்டு அமைச்சில் பணிபுரிந்த பிரபலமான ஒரு வழக்கறிஞர். வெளிநாட்டில் வாழும் எதிர்க்கட்சி ஈராக்கியரோடு தொடர்பு கொள்ள முயன்றார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்து கொண்டு போனார்கள். இன்றுவரை அவர் திரும்பிவரவில்லை.

''நான் மெடிக்கல் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தேன். அங்கிருந்து நீக்கிவிட்டார்கள். எமது குடும்பம் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டது. ஜோர்டானிலுள்ள எனது சகோதரி அனுப்பிய சிறுதொகைப் பணத்தில் குடும்பம் ஓடியது.

1997 இல் எனது எதிர்கால வாழ்க்கைத் துணைவியை சந்தித்தேன். அதற்கு முன் என் தந்தையின் நண்பர்களுடன் தொடர்பு கொள்ள முயற்சி செய்தேன். எனது காதல் பற்றி அதிகாரிகள் அறிந்து கொண்டார்கள்.எனது வெளிநாட்டுத் தொடர்புகள் பற்றி முழுவதையும் சொல்ல வேண்டும் என்றும் இல்லையென்றால் காதலியின் குடும்பத்தை நொருக்குவோம் என்றும் சொன்னார்கள். ஆனால் ஜனநாயகத்தைத் தவிர நான் வேறு எதனையும் இழக்கத் தயாராய் இருந்தேன். என்னை ஜெயிலில் அடைத்தார்கள். ஒரு வருடம் ஜெயிலில் இருந்தேன். என்னை அடித்தார்கள் கொடுமைப் படுத்தினார்கள். ஆனால் என்னிடமிருந்து எதனையும் அவர்களால் பிழிந்தெடுக்க முடியவில்லை. மிகவும் நோய் வாய்ப்பட்ட நிலையில் ஜெயிலில் இருந்து வெளியில் வந்தேன். எனக்கு சிறிது மருத்துவ அறிவு இருந்ததால் அதனைப் பயன்படுத்தி உடலைத் தேற்றிக் கொண்டேன்'' என்றார்.

தனது கால்சட்டை பாக்கெட்டிலிருந்த ஒரு துண்டுக் கடதாசியை எடுத்து அமெரிக்காவிலுள்ள நண்பர்களின் பெயர்களை வாசித்துக் காட்டினார்.

''அமெரிக்காவும் பிரிட்டனும் எங்களை விடுவிக்க வருவார்கள் என்று நான் எப்போதும் கருதி வந்துள்ளேன். முற்றுகை ஆரம்பமானதும் மக்களைக் கவலைப்படவேண்டாம் அவர்கள் கட்டாயம் விரைவில் வருவார்கள் என்று கூறிவந்தேன்'' என்றார் ஹெய்டர். (பி)

# ''சதாமின் வீழ்ச்சி பெர்ளின் சுவர் வீழ்ந்தது போல''


## யு.எஸ்.பாது.அமைச்சர்

(வாஷிங்டன்)

ஹிட்லர், ஸ்டாலின், லெனின், செசஸ்கு வரிசையில் சதாம் ஹுஸைன் உள்ளார் என்று அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் டொனால்ட் ரம்ஸ்பெல்ட் கூறினார்.

ஈராக்கில் சதாம் அரசு வீழ்ந்தது, பெர்ளின் சுவர் வீழ்ந்ததைப் போல உள்ளது. (மக்களின் சுதந்திர வேட்கையை குறிப்பது) என்றும் அவர் சொன்னார். ஈராக்கில் பணி முடிந்துவிடவில்லை யென்றும் முழுமையாக வெற்றி பெறும் வரை ஓயமாட்டோம் என்றும் அவர் சொன்னார்.

அமெரிக்க படைகளை ஈராக் மக்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்றனர் என்றும் ஈராக் மக்களுக்கு விடிவு காலம் பிறந்துவிட்டது என்றும் அவர் கூறினார்.




ஒரு காலத்தில் ஈராக்கிய தலைவர்களினால் உல்லாச விடுதியாக விளங்கிய அல்-மன்சூர் உல்லாசப்படகு



பல கோடி டொலர் பெறுமதியான இக்கப்பல் மீது 16 தடவை கூட்டணிப்படைகள் தாக்குதல் நடத்தினர்.




ஹெலிகொப்டர் இறங்கு தளம் சேதமாக்கப்பட்டுக் கிடக்கிறது



அழகான ஒரு பெரிய பறவை போல் காட்சியளிக்குமாம் இந்த உல்லாசப்படகு






பாவனைக்கு உதவாத நிலையில் காணப்படும் உல்லாசப்படகின் உட்பகுதி



சதாமின் உல்லாசப் படகு நொறுங்கிய நிலையில் ஈரானுடன் போரிட்டதற்காக சவுதி அவருக்கு அன்பளிப்பு செய்த படகு



பஸ்ரா நகரிலுள்ள அதிபர் சதாமின் அழிக்கப்பட்ட மாளிகையில் அமெரிக்க வீரர் ஒருவர்



பஸ்ரா நகரில் சதாமின் மாளிகை அருகே நடத்தப்பட்ட தாக்குதலில் எழும் புகை




சதாம் ஹூசைனை தேடும் பணியில் ஈடுபட்டுள்ள



பஸ்ரா நகரில் அழிவடைந்த நிலையில் உள்ள சதாமின் மாளிகையின் ஒரு பக்கத் தோற்றம்



அழிவடைந்துள்ள ஈராக்கிய நகரத்திலுள்ள தனது வீட்டினைக் கடந்து செல்லும் ஈராக்கியர் ஒருவர்



ஈராக்கில் கூட்டணிப் படைகள் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்

## தகவல் தரும் விஞ்ஞானிகளுக்குப் பரிசு

ஈராக் விஞ்ஞானிகளும் இராணுவ அதிகாரிகளும் மற்றவர்களும் தாங்களாகவே முன்வந்து பேரழிவு ஆயுதங்கள் குறித்தும் அமெரிக்கப் போர்க்கைதிகள் குறித்தும் தகவல் தரவேண்டும். அப்படிச் செய்தால் பரிசு கிடைக்கும் என்றார். (பி)



ஈராக்கிய வெடிமருந்து களஞ்சியத்தில் வெடிவிபத்து ஏற்பட்டு வெடித்துச் சிதறும் காட்சி

சதாம் ஹூசைனை தேடும் பணியில் ஈடுபட்டுள்ள கூட்டணிப் படையினர் தமது வழமையான பணியில் ஈடுபட்டுள்ளனர்



உல்லாசப்படகின் சேதமுற்ற பகுதியை பார்வையிடும் ஒருவர்



உல்லாசப் படகின் உட்பகுதியில் சிதைவடைந்துள்ள பகுதிகள்

# ஈராக்கின் 3வது முக்கிய நகரான மொசுலுக்குள்ளும் கூட்டணிப்படைகள் நேற்று நுழைந்தன

## அங்குள்ள ஈராக்கியப் படையினர் சரணடைவதற்கு பேச்சுவார்த்தை

(பக்தாத்)

**பக்தாத், பஸ்ரா ஆகிய நகரங்களைக் கைப்பற்றியதன் பின்னர் ஈராக்கின் மூன்றாவது பெரிய நகரான மொசுலுக்குள் நேற்று கூட்டுப்படை அணிகள் குர்திஷ் படைகளின் ஆதரவோடு நுழைந்துள்ளன.**

**அங்கிருந்து சதாம் ஹுசைனுக்கு விசுவாசமான படைகள் சரணடைவது பற்றி பேச்சுவார்த்தைகள் ஆரம்பித்திருப்பதாக குர்திஷ் படை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.**

**இதற்கிடையில் நேற்று முன்தினம் கிர்குக் நகருக்குள் நுழைந்து நிலைகொண்டுள்ள குர்திஷ் படைகள் 24 மணிநேரத்தில் வெளியேற வேண்டுமென துருக்கி எச்சரித்துள்ளது. இப்பிரதேசத்தில் குர்திஷ் தளமாக ஆக்கப்படுவதை அனுமதிக்க முடியாதென்று துருக்கிய அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.**

மொசுல் நகரைக் கைப்பற்றியுள்ள கூட்டுப்படைகள் அடுத்த படியாக சதாம் ஹுசைனின் மூதாதையரின் நகரமான டிக்கிரியை நோக்கி முன்னேற வியூகம் அமைத்து வருவதாகவும் அங்கு பெரும் எதிர்ப்பை அவர்கள் எதிர்கொள்ளக்கூடும் என்றும் கருதப் படுகின்றது.

### குழப்பமும் சூறையாடலும்

பக்தாத் நகரிலும் ஏனைய பகுதி களிலும் இன்னமும் குழப்பமும் குளறுபடிகளும் நீடித்துவரும் அதே வேளை கொள்ளையடிப்பும் சூறை யாடலும் தங்குதடையின்றி நடை பெற்று வருகின்றது.

கொள்ளையடிப்பவர்களைத் தடுத்து நாட்டில் அமைதியான சூழ்நிலையை ஏற்படுத்தும் முயற்சி கூட்டுப்படை களைப் பொறுத்தவரை ஒரு பெரும் சவாலாகவே இருக்கப் போகின்றது.

பக்தாத்திலும் வேறு பகுதிகளி லும் கூட்டுப்படைகளுக்கு ஆங்காங்கே சிறு சிறு எதிர்ப்புக்கள் இருக்கவே செய்கின்றன. ஆனால் எதிர்ப்புக் களை முறியடித்துக் கொண்டு முன் னேறுவதில் கூட்டுப்படையினர் திறமையான தேர்ச்சி பெற்றவர் களாகத் தோன்றுகின்றனர்.

### ஈராக்கியரிடமே ஆட்சி அதிகாரம்

இதற்கிடையில் போருக்குப் பிந்திய ஈராக் நாட்டின் ஆட்சி அந்நாட்டு மக்களிடமே கையளிக்கப்படும் என்று அமெரிக்க அதிபரும், பிரிட்டிஷ் பிரதம மந்திரி ரொனி பிளேயரும் உறுதியளித்திருக்கிறார்கள்.

ஈராக்கிய ஆட்சியில் அமெரிக்கா வோ, பிரிட்டனோ, ஐ.நா.வோ பங்கேற்கப் போவதில்லை. ஈராக்கிய மக்கள் அனைவருமே பங்கேற்கும் விதத்தில் ஆட்சிப் பொறுப்பு அவர் களிடமே கையளிக்கப்படும் என்று அதிபர் புஷ்ஷும் பிரதமர் பிளேயரும் அறிவித்துள்ளனர்.

ஈராக்கிற்கு மேலாகப் பறந்து கொண்டிருக்கும் அதிநவீன விமான மொன்றிலிருந்து இத்தலைவர் களின் பதிவு செய்யப்பட்ட செய்திகள் ஈராக்கிய மக்களுக்கு தொலைக் காட்சியில் ஒளிபரப்பப்பட்டன.

ஈராக்கின் தென்பகுதியில் வழமை யான நிலைமைகளை உருவாக்க வென உம்கஸார் துறைமுகத்தில் வந்திறங்கியுள்ள அமெரிக்க ஓய்வு பெற்ற லெப்டினன்ட் ஜெனரல் றோஜர் வால்ட்டர்ஸ் ஏற்கனவே தன் கடமை களை ஆரம்பித்துவிட்டார். பாடசாலை ... வாய்ப்புக்களை ஏற்படுத்துவதிலும் நீர்விநியோகம் சுகாதாரம் முதலிய பிரச்சினைகளைத் தமது குழுவினர் முதலில் கவனிப்பார்கள் என்று அவர் கூறியுள்ளார்.

ஈராக்கில் மக்கள் பிரதிநிதித்துவ அரசு ஒன்றை அமைக்கப்படும் வரை இவர் கவர்னராக செயல்படுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (பி)

# மசூதி சண்டையில் அமெரிக்க வீரர் பலி

(பக்தாத்)

பக்தாத் நகரில் உள்ள மசூதி ஒன்றில் அமெரிக்கப் படையினருக்கும், ஈராக் படையினருக்குமிடையே துப்பாக் கிச் சண்டை நடந்தது. இதில் அமெரிக்க கடற்படை வீரர் ஒருவர் கொல்லப்பட்டார்.

ஈராக் தலைநகர் பக்தாத்தை தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துள்ள அமெரிக்க கூட்டணிப்படை யினர் நகரில் உள்ள முக்கியமான இடங்களில் கடுமையான சோதனை நடத்தி வருகின்றனர்.

ஈராக் அதிபர் சதாம் ஹுசைனின் அதிகாரபூர்வ ஜனாதிபதி மாளிகை அருகில் ஒரு மசூதி உள்ளது. இந்த மசூதியில் ஒருவேளை சதாம் ஹுசைன் ஒளிந்திருக்கலாம் என்று கருதிய அமெரிக்கக் கூட்டணிப் படையினர் அந்த மசூதிக்குள் நுழைந்து சதாமை தேடும் பணியில்ஈடுபட்டனர்.

அப்போது சதாம் ஹுசைனின் சிறப்புப் படையான குடியரசுப் படைக்கும் அமெரிக்கக் கூட்டணிப் படைக்கும் இடையே மோதல் ஏற்பட்டது.

நள்ளிரவு நேரத்தில் சுமார் அரைமணிநேரம் நீடித்த இந்தத் துப்பாக்கிச் சண்டையில் அமெரிக்க கடற்படை வீரர்ஒருவர் கொல்லப்பட்டார்.

இந்தத் தகவலை பக்தாத்தில் நேரடி செய்தி சேகரிக்கும் பி.பி.சி தொலைக்காட்சி நிறுவன நிருபர் ஒருவர் தெரிவித்துள்ளார். (பி)

# புதிய ஈராக் அரசில் 43 பேர் இருப்பர் இன்று நஸீரியாவில் பேச்சுவார்த்தை

(வாஷிங்டன்)

ஈராக்கில் அதிபர் சதாம் ஹுசைன் ஆட்சி கவிழ்க்கப்பட்டதை அடுத்து அங்கு 43 பேர் கொண்ட புதிய அரசை அமைப்பதற்கான ஏற்பாடுகளை அமெரிக்கா மேற்கொண்டு வருகின்றது. இதற்கான முதல் கட்டப் பேச்சு வார்த்தை இன்று 12ஆம் திகதி ஈராக்கில் உள்ள நஸீரியா நகரில் நடைபெறவுள்ளது.

பேரழிவை உண்டாக்கும் ஆயுதங் களை ஈராக் வைத்திருப்பதாகக் கூறி அந்நாட்டின் மீது அமெரிக்கா கடந்த மாதம் 20 ஆம் திகதி போர் தொடுத்தது.

இருபத்தொரு நாள் கடுமையான சண்டைக்குப் பிறகு ஈராக் தலைநகர் பக்தாத்தை அமெரிக்கப்படைகள் கைப்பற்றின. பக்தாத் நகரை சின்னா பின்னமாக்கிய அமெரிக்க-இங்கி லாந்துப் படைகள் தற்போது பக்தாத் நகரம் தங்களது கட்டுப்பாட்டில் உள்ளதாக தெரிவித்தன.

ஈராக் அதிபர் சதாம் ஹுசைனை வீழ்த்துவது தான் தங்களின் குறி என்று கூறிய அமெரிக்கப்படையினர் சதாம் ஹுசைனின் அரண்மனைகள் உட்பட அவர் தங்கியிருந்ததாக சந்தேகிக்கப்பட்ட அனைத்து கட்டடங் களையும் குண்டு வீசித் தகர்த்தனர்.

இந்தத் தாக்குதல்களில் சதாம் ஹுசைனும் அவரது மகன்கள் குஸாசே, உதய் ஆகியோரும் பலியானார்களா? என்பது தெரியவில்லை.

சதாம் ஹுசைன் சாகவில்லை என்றும் அவர் பாதுகாப்பான இடத்திற்கு தப்பிச் சென்றிருக்கலாம் என்றும் சில தகவல்கள் கூறுகின்றன.

சதாம் ஹுசைன் என்ன ஆனார் என்பது மர்மமாக இருக்கும் நிலையில் ஈராக்கில் சதாம் ஹுசைன் ஆட்சி கவிழ்க்கப்பட்டதாக அமெரிக்கா அதிகார்பூர்வமாக அறிவித்துள்ளது.

ஈராக் தற்போது தங்கள் கட்டுப்பாட்டிற்குள் வந்துவிட்டதால் அங்கு புதிய இடைக்கால அரசு ஒன்றை அமைக்கும் பணியில் அமெரிக்காவும் இங்கிலாந்தும் தீவிரமாக ஈடுபட்டுள்ளன.

ஈராக்கில் புதிதாக அமைக்கப்பட விருக்கும் புதிய அரசில் மொத்தம் 43 பேர் இடம்பெறுவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இவர்களில் 14 பேர் சதாம் ஹுசைனினால் நாடு கடத்தப்பட்டு தற்போது வெளிநாடு களில் இருப்பவர்கள் ஆவர்.

மீதமுள்ள 29 பேர் தற்போது ஈராக்கில் உள்ள முக்கிய அரசியல் கட்சித் தலைவர்கள் ஆவர். இவர்கள் அனைவருமே சதாம் ஹுசைனின் எதிர்ப்பாளர்கள் ஆவர்.

இந்தத் தகவலை நிருபர்களிடம் கூறிய ஈராக் தேசிய காங்கிரஸ் தலைவர் அகமது சல் அபி ஈராக் புதிய அரசு அமைவது தொடர்பாக 12ஆம் திகதி (இன்று). ஈராக் தென் பகுதியில் உள்ள நஸ்ஸிரியா நகரில் நடைபெறும் என்று கூறினார்.

நஸீரியா நகரில் அருகேயுள்ள இராணுவத் தளம் ஒன்றில் இந்தப் பேச்சுநடைபெறும் என்றும் இதில் சம்பந்தப்பட்ட 43 அரசியல் தலைவர் களும் கலந்து கொள்வார்கள் என்றும் அவர் கூறினார்.

புதிய இடைக்கால அரசு அமைப்பது தொடர்பான இந்த ஆலோசனைக் கூட்டத்திற்கு அமெரிக்காவின் சார்பில் 3 முக்கிய பிரதிநிதிகள் கலந்து கொள்வார்கள்.

அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷின் வெள்ளைமாளிகை அதிகாரி ஒருவரும் வெளியுறவுத்துறை அதிகாரி ஒருவரும் இராணுவத்துறை அதிகாரி ஒருவரும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்வார்கள்.

ஈராக்கில் புதிய அரசு அமைப்பது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நஸீரியா நகரில் நடைபெறும் என்பதை அமெரிக்கத் துணை அதிபர் டிக் சென் னியும் உறுதி செய்துள்ளனர். (பி)

# அதிபர் முஷாரப் அரசுக்கு புதிய நெருக்கடி

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் இராணுவத் தளபதி பதவியிலிருந்து விலக முடியாது என்று அதிபர் பர்வீஸ் முஷாரப் அறிவித்துள்ளார்.

முஷாரப்பின் அரசியல் எதிர்காலம், அவர் கொண்டுவந்த அரசமைப்புச் சட்டத்திருத்தங்கள் தொடர்பாக ஆளும் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (கியு). மற்றும் இஸ்லாமிய எதிர்க்கட்சிகள் கூட்டணியான முத்தாஹிதா மஜ்லிஸ் அமல் (எம்எம்ஏ) ஆகியவை புதன் கிழமை பேச்சுவார்த்தை நடத்தின. அதில் உடன்பாடு ஏற்படவில்லை.

இராணுவத் தளபதி பதவியிலிருந்து முஷாரப் விலக வேண்டும் எனபதில் பிடிவாதம் காட்டிய எம்எம்ஏ கூட்டணி, நாடாளுமன்றத்தை கலைக்க முஷாரப் புக்கு அதிகாரம் தர வகை செய்யும் அரசமைப்புச் சட்டத் திருத்தத்தை சட்டவிரோதமானது என்று அறிவித் தது. இந்நிலையில் இராணுவத் தளபதி பதவியிலிருந்து விலகும் பேச்சுக்கே இடமில்லை. பதவி விலகல் தொடர்பாக எவ்வித வாக்குறுதி யையும் தரமுடியாது என்று முஷாரப் கூறியுள்ளதாக ''நேஷன்'' பத்திரிகை வியாழக்கிழமை வெளியிட்ட செய்தி தெரிவிக்கிறது.

இராணுவத் தளபதி பதவியில் நீடிப்பது தனக்கும் நாட்டுக்கும் மிக அவசியமானதாகும் என்று முஷாரப் கூறியுள்ளார். ''நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் அதிபருக்கு தரக்கூடாது; அரசை மட்டும் கலைக்க அவருக்கு அதிகாரம் வழங்கலாம்.

இது தொடர்பாக சட்ட அமைப்பு ஆணையில் மாற்றம் கொண்டுவர வேண்டும் என பிரதமர் ஜமாலி தலைமையிலான அரசு விரும்பினால் எனது தரப்பில் அதற்கு ஆட்சேபம் இல்லை'' என்றும் முஷாரப் கூறியுள் ளார். இதனிடையே பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்படாதது முக்கியத்துவம் வாய்ந்தது என்று கருதப்படுகின்றது. இப்பேச்சுவார்த்தையில் பங்கேற்க முன்னாள் பிரதமர் பேநசீர் புட்டோ தலைமையிலான பாகிஸ்தான் மக்கள் கட்சி, நவாஸ் செரீப் தலைமை யிலான பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (என்) ஆகியவை அழைக்கப்படவில்லை. பேச்சுவார்த்தைக்கு தாம் அழைக் கப்படாததற்கு கண்டனம் தெரிவித்துள்ள இருகட்சிகளும் இப்பேச்சுவார்த்தை எதிர்க்கட்சிகளை பிளவு படுத்த அரசு மேற்கொண்டுள்ள தந்திரம் என்று குறிப்பிட்டுள்ளன. (பி)

# ஈரான் சிரியா மீது தாக்குதல் நடக்காது

## கொலின்பவல்

(வாஷிங்டன்)

ஈராக்கை அடுத்து ஈரான், சிரியா ஆகிய நாடுகள் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தக் கூடும் என்று கூறப்படும் நிலையில் அமெரிக்கா எந்த ஒரு நாட்டின் மீதும் தாக்குதல் நடத்தாது என்றும், அவ்வாறான நாடுகளின் பட்டியல் இருப்பதாகக் கூறுவது தவறானது என்றும் அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கொலின் பவல் கூறியுள்ளார்.

ஈராக்கிற்கு இராணுவத் தளபாடங் களை சிரியா வழங்கியுள்ளதாகவும், பகையுணர்வோடு இந்தச் செயலிற்கு சிரிய அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டும் என்றும் அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் டொனால்ட் ரம்ஸ்வெல் கடந்த 28ஆம் திகதி கூறியிருந்தார்.

இந்த நிலையில் ஈராக்கில் நடைபெற்ற சம்பவங்கள் ஈரான், சிரியா ஆகிய நாடுகளிற்குப் படிப் பினையாக இருந்திருக்கும் என்றும் அதனால் இரசாயன, உயிரி மற்றும் அணு ஆயுதங்களைக் கைவிடுவ தோடு அவை பயங்கரவாத அமைப்புக் களிற்கு ஆதரவு வழங்குவதையும் நிறுத்திக் கொள்ளும் என்று நம்புவதாகக் கொலின் பவல் கூறியுள்ளார். (பி-9)

# குர்திஷ் படைகளிடம் கிர்குக் நகரம் வந்தது

(துபை)

ஈராக்கில் சதாம் ஆட்சியின் வீழ்ச் சிக்குப் பிறகு வடக்கில் உள்ள குர்து இனத்தவர் கிர்குக் நகரைக் கைப்பற்றி யுள்ளனர்.

வடக்கு ஈராக்கில் எண்ணெய் வயல் உள்ள கிர்குக் நகரில் அமெரிக்க ஆதரவுபெற்ற குர்து படைகள் நுழைந்தன. அங்கு ஈராக் படையினர் ஆரம்பத்தில் கடும் எதிர்ப்பை காட்டியதாகக் கூறப்படுகின்றது. இப்போது அந்த நகரம் குர்துக்களின் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டது.

அதேசமயம் குர்து இனத்தவர் தனி நாடு கோருவதை துருக்கி ஏற்காது என அந்நாடு தெரிவித்துள்ளது.

நிருபர்களிடம் பேசிய அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் அப்துல் குல் நிலைமையை துருக்கி அரசு உன்னிப்பாகக் கவனித்து வருகிறது. தேவையான பேச்சுவார்த்தையை துருக்கி அரசு நடத்தும் என்றார்.

இதனிடையில் புதிய அரசு குறித்து அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ், பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயர் ஆற்றிய உரை ஈராக் மக்களுக்காக தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டது. (பி)

# சதாமின் மகன் வாழ்ந்த உல்லாச மாளிகையில் இருந்த டாம்பீகப் பொருட்கள்

(பக்தாத்)

பக்தாத்தில் ஜனாதிபதி சதாம் ஹுசைனின் மகன் உதயின் மாளிகையில் இருந்த பலபெறுமதியான டாம்பீக பொருட்கள் பொதுமக்க ளால் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

மதுவகைகள், துப்பாக்கிகள், பிரபல ஓவியங்கள் ஆகியவற்றோடு உதயிடம் இருந்த வெள்ளை நிற அராபியக் குதிரைகளும் கொள்ளையடிக் கப்பட்டுள்ளன.

அத்தோடு மாளிகையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பெறுமதி மிக்க உல்லாசப் படகின் பாகங்களும், உபகரணங்களும் கழட்டிச் செல்லப் பட்டிருக்கின்றன. எடுத்துச் செல்ல முடியாத தங்கத் தண்ணீர்க் குழாய்கள் மற்றும் அலங்கார விளக்குகள் அடித்து நொறுக்கப்பட்டுள்ளன.

அமெரிக்கத் தாக்குதலிற்கு முன்னர் டைக்கிறிஸ் நதிக்கருகில் அமைந்துள்ள இந்த மாளிகையைப் பார்ப்பதற்குக்கூட மக்கள் அஞ்சியி ருந்தார்கள்.

39 வயதான உதய் பாபல் என்ற பத்திரிகையையும், ஷெஹெப் என்ற தொலைக்காட்சி சேவையினையும் இவர் நடத்திவந்துள்ளார். (பி-9)

# சமாதான முயற்சிகள் தொடர்பில் செய்தியாளர்களுக்கு விளக்கம்

## நாடளாவிய ரீதியில் திட்டம் அறிமுகம்

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினாலும் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரனாலும் முன்னெடுத்துச் செல்லப்படும் சமாதான முயற்சிகள் தொடர்பாக பிராந்தியச் செய்தியாளர்களுக்கு விளக்கமளிக்கும் திட்டம் ஒன்று நாடளாவிய ரீதியில் அமுல்படுத்தப் பட்டுள்ளது.

இதன் முதல் கட்டமாக நேற்று கண்டி,மாத்தளை ,நுவரெலியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த35 பிராந்தியச் செய்தியாளர்களுக்கான கருத்தரங்கு மலையக ரட்ணசிறி விக்கிரமநாயக்க பயிற்சிக் கூடத்தில் நடைபெற்றது.

இக்கருத்தரங்கில்சமாதான முயற்சிகளின் முன்னேற்றங்கள்,சமஷ்டி முறையிலான தீர்வு,போர்நிறுத்த உடன்படிக்கை அமுலாக்கல் என்பன தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டது.

இக்கருத்தரங்கில் ஊடகத்துறை சார் உத்தியோகத்தர்கள் ,நோர்வேத் தூதரக அதிகாரிகள் ஆகியோரும் கலந்து கொண்டனர். (உ-8)

# உல்லாசப்பயணிகள் நலன்கருதி பொருளாதார மத்திய நிலையங்கள்

(கொழும்பு)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியாஆகிய மாவட்டங்களில் உள்நாட்டு வெளிநாட்டு உல்லாசப்பயணிகளின் நன்மை கருதி 3 பொருளாதார மத்திய நிலையங்களை அமைக்க கிராமிய பொருளாதார அமைச்சர் பந்துலகுணவர்த்தன நடவடிக்கை எடுத்துள்ளார்.

களுத்துறையில் நேற்று முன்தினம் நடந்த வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் பிரதி நிதி அமைச்சர் இத் தகவலை வெளியிட்டார்.

தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான முயற்சிகளை அடுத்து வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு வரும் சுற்றுலாப்பயணிகளின் வருகை அதிகரித்துள்ளது.

இதன்காரணமாகவே வடபகுதியிலும் பொருளாதார மத்திய நிலையங்களை அமைக்க உல்லாசத்துறை தர்மானித்துள்ளதாகஅவர்மேலும் தெரிவித்துள்ளார். (உ-8)

# குருகுல கலாசாலையில் புதியவகுப்புக்கள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

சுபானு வருடப் பிறப்பை முன்னிட்டு எதிர்வரும் 17ஆம் திகதி வியாழக்கிழமை பகல்12.45முதல் 1.58 வரையான வித்தியாரம்ப சுபவேளையில் குருகுல மாணவர்களுக்கான நாள்வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.

இந்து சமயவிவகார அலுவல்கள் அமைச்சர் தி.மகேஸ்வரன் யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர்,சர்வதேச இந்துமத குரு பீடாதிபதி அதிவந்தனீய ஜ.மகேஸ்வரக் குருக்கள்,நல்லைஆதீன குருமஹா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீபரமாசார்ய சுவாமிகள் மற்றும் சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தனரும் மாணவர்களின் பெற்றோரும் இவ் வைபவத்தில் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதுவரை குருகுலத்தில் சேராத புதியமாணவர்கள் இத்தினத்தில் தமது விண்ணப்பத்தை வழங்கி புதிதாக சேர்ந்து கொள்ளலாம் எனவும், கணனிவகுப்புக்கள் ஆங்கில வகுப்புக்கள் என்பன வுமஇத்தினத்தில் ஆரம்பிக்கப் படவுள்ளதாகவும் நிர்வாக உத்தியோகத்தர் ப.சிவானந்தசர்மா தெரிவித்துள்ளார்.

விடுதி மாணவர்களாக சேர விரும்புவோர் இன்னும் சில வெறறிடங்கள் மட்டுமே உள்ளதால் விரைவில் தமது விண்ணப்பங்களை அனுப்பவேண்டும் எனவும் கேட்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் யூன் மாதத்தில் முதலாவது அரையாண்டு பூர்த்தியாவதை முன்னிட்டு அர்ச்சகாச்சாரியார் தரம்1 பரீட்சைகள் நடத்துவதற்கான ஏற்பாடுகளும் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இணுவில் தர்மசாஸ்தா குருகுல அதிபர் பிரமஸ்ரீ தா. மஹாதேவக் குருக்களால் நடத்தப்படும் விஷேட வேதாத்யயன வகுப்புக்களும் மயிலணி பிரம்மஸ்ரீ ச சோமாஸ்கந்த குருக்களால் நடத்தப்படும் வைதீக வகுப்புக்களும் சித்திரைப்புத்தாண்டுடன் ஏப்ரல் கடைசி வாரத்தில் ஆரம்பமாகவுள்ளதால் இவ்வகுப்புக்களில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் தமது பெயர்களை உடனடியாக குருகுலத்தில் பதிவு செய்யலாம் எனவும் தபால்மூலம் தொடர்பு கொள்ளலாம் எனவும் அறிவிக்கப் பட்டுள்ளது.

இதேவேளை,2ஆம்உலக இந்து மாநாட்டை முன்னிட்டுவேதசிவாகம குருகுலத்தில் சில சிறப்புக்கருத்தரங்குகளும் சர்வதேச இந்து மத குருமார் ஒன்றியத்தினரால் நடத்தப் படவுள்ளன. (உ)

# கலைவிழா

(நெல்லியடி)

கரவெட்டி முன்பள்ளி ஆசிரியர்களின் ஏற்பாட்டில் எதிர்வரும் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வருடாந்த மாணவர் கலைவிழா கரவெட்டிப்பிரதேசசபை மண்டபத்தில இடம் பெறவுளளது.

60 முன்பள்ளி ஆசிரியர்கள் மற்றும் முன் பள்ளிகளில் கல்வி பயிலும் 300 மாணவர்கள் பங்கேற்கும் இக் கலைவிழா, முன்பள்ளி ஆசிரியர் சங்கத்தலைவி திருமதி ரோகினி கருணாகரன் தலைமையில நடைபெறவுள்ளது. (உ-44)

# தட்டிக் கேட்பாரில்லை

(கோப்பாய்)

கோப்பாய் தெற்குப் பகுதியில் சட்ட விரோதமாக மின்சாரம் பெறுவோர் தொகை அதிகரித்து வருவதாக மின் பாவனையாளர்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

இதனைத் தட்டிக் கேட்பார் யாருமில்லாததால் இச் செயலில் ஈடுபடுவோர் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (உ-79)



ஊரெழு கணேச வித்தியாசாலை விளையாட்டுப்போட்டியில் பிரதமவிருந்தினராக கலந்து கொண்ட கோப்பாய் பிரதேசசெயலர் செ.ஸ்ரீநிவாசன் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட முக்கிய பிரமுகர்களையும் படத்தில் காணலாம்.



வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையின் 12வது இலவச மூக்குக்கண்ணாடி வழங்கும் விழாவிலே அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலய யாழ் வதிவிடப் பிரதிநிதி திருமதி மொறிஸ் பயனாளி ஒருவருக்கு இலவச மூக்குக் கண்ணாடியை அணிவிப்பதையும் பிரதேச செயலர் எஸ்.கனகரத்தினம் வைத்திய கலாநிதி கே.மயிலேறும் பெருமாள் ஆகியோரையும காணலாம்.

# படைத்தரப்பின் பங்கேற்பு பற்றி தே.இ.சே. மன்றம் விளக்கம்

(யாழ்ப்பாணம்)


இளைஞர்படையணிக்கான ஆள்சேர்ப்பு நேர்முகதேர்வுக்குழுவில இராணுவத்தரப்பு பங்கேற்றமை குறித்து எதுவித அச்சமும் கொள்ளத்தேவையில்லை என தேசிய இளைஞர் சேவைகள் மன்றததினர் தெரிவித்துள்ளனர்.

உடல் கட்டுமானத்திறன் தொடர்பான தீர்மானங்களை எடுப்பதற்கு பொருத்தமானவர் என்ற காரணத்தாலேயே நேர்முகத்தேர்வுக் குழுவில் பண்ட அதிகாரி ஒருவர் இணைக்கப்பட்டார்.

இராணுவத்திற்கு இளைஞரை சேர்க்கும் முயற்சி இதுவல்ல இந்நிலைமையை தவறாகபுரிந்து கொண்டு அடுத்து வரும் தேர்வுகளுககு சமுகமளிக்க தவறவேண்டாம் எனவும் யாழ்.தேசிய இளைஞர் சேவைகள்மன்ற வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அண்மையில் இடம் பெற்ற வட்டுக்கோட்டைப்பகுதிக்கான இளைஞர் படையணி நேர்முகத்தேர்வுக குழுவில் படை அதிகாரி ஒருவர் பங்கேற்றிருந்தமைகுறித்து பல தரப்புகளில் இருந்தும் சந்தேகங்கள் எழுப்பப்பட்டமை தெரிந்ததே. (உ-7)

# 7ஆம் சுற்றுப் பேச்சு இடமாற்றம் குறித்து உத்தியோகபூர்வ அறிவிப்பு இல்லை



# உத்தியோகபூர்வ அறிவிப்பு இல்லை

## அமைச்சர் டிரோன் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கப் பிரதிநிதிகளுக்கும் தமிழீழ விடுதலைப்புலிப் பிரதிநிதிகளுக்கும் இடையில் இம்மாதம் 29ஆம்திகதி தாய்லாந்தில் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தையை நோர்வேத்தலைநகர் ஒஸ்லோவுக்கு மாற்றுவது தொடர்பாக இதுவரை உத்தியோகபூர்வ அறிவிப்பு எதுவும் கிடைக்கவில்லை என்று வெளிவிவகார அமைச்சர் டிரோன்பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இது பற்றி கருத்துத் தெரிவித்த டிரோன்,

தென்னிகிழக்காசிய நாடுகளில் தற்போது வெகுவேகமாகட் பரவிவரும் சார்ஸ்வைரஸ் நோய் காரணமாக 7ஆம் சுற்றுப்பேச்சுவார்த்தையினை ஒஸ்லோ நகருக்கு மாற்றுமாறு நோர்வேப் பிரதிநிதிகள் கேட்டிருந்தனர்.

எவ்வாறாயினும் உலக சுகாதார ஸ்தாபனத்திடம் தாய்லாந்து சுகாதார நிலைமைபற்றிப் பேசிய பின்னரே இறுதி முடிவெடுக்கப்படும்.

தாய்லாந்தில் இந் நோய்க் கிருமித்தாக்கத்துக்கு உள்ளாகி இதுவரை இருவர் உயிரிழந்துள்ளனர்.

சார்ஸ் வைரஸ் நோய் காரணமாக 7ஆம் சுற்றுப் பேச்சுவார்த்தைகள் ஒஸ்லோவில் நடத்தப்படும் எனப் பலதரப்பிலும் எதிர்பார்க்கப்படுவது சுட்டிக்காட்டத்தக்கது. (உ-8)




# 50 கோடி செலவில் கல்முனை நவீனமயப்படுத்தப்படும்

(கொழும்பு)

கல்முனை நகரம் 50 கோடிரூபா செலவில் நவீனமயப்படுத்தப்படவிருப்பதாக ஸ்ரீலங்காமுஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸ் தெரிவித்துள்ளார்.

கல்முனை நகரப்பகுதியில் நவீன சந்தைக்கட்டடம்,சுகாதார நிலையங்கள்,அரச கட்டடங்கள் என்பவற்றை புனர்நிர்மாணித்தல் மற்றும் வீதி திருத்தங்களுக்கும் இந்நிதி செலவி[illegible]ள்ளது.

நகர அபிவிருத்தி மற்றும் குறைந்த வருமான விசேடதிட்டத்தின் கீழ் ஆசியஅபிவிருத்தி வங்கியின் நிதி உதவிமூலம் இவ்அபிவிருத்தித் திட்டங்கள் மேறகொள்ளப்படவுள்ளன.


இதற்கமைய அடுத்த மாத நடுப்பகுதியில் நகர அபிவிருத்திஅதிகார சபையின் மாவட்ட காரியாலயம் ஒன்றும்,வீடமைப்பு அதிகார சபையின் மாவட்டஅலுவலகம் ஒன்றும் கல்முனையில் திறந்துவைக்கப்படவுள்ளது. (உ-8)

# சம்பளப்பணம் கொள்ளை

(கொழும்பு)


அங்குணகெல புதைபொருள் ஆராய்ச்சி நிலைய ஊழியர்களுக்கான 4 இலட்சம் ரூபா சம்பளப் பணம் அதனை கொண்டுசென்ற வாகனத்துடன் இனம்தெரியாத ஆயுதக்கோஷ்டி ஒன்றினால் கொள்ளையிடப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை குட்டிக்ஹல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (உ-8)



மாமனிதர்குமார் பொன்னம்பலத்தின் 8வது ஆண்டு நினைவஞ்சலிக்கூட்டத்திற்கு தலைமைதாங்கி சட்டத்தரணி ஆர்.உருத்திரா உரையாற்றுகிறார்.

படங்கள் :பரு. நிருபர்



தும்பளை யோகசாந்தி நிலையம் அண்மையில் நடத்திய யோகாசனப் பயிற்சி நிகழ்வில் எடுக்கப்பட்ட படம்.

படம்: நெல்லியடி நிருபர்

# தமிழர்களுக்கு நல்ல தீர்வைப் பெற்றுத் தர தென்பகுதி மக்கள் ஒன்றிணைய வேண்டும்

## மானுடத்தின் அறைகூவலில் எழிலன் அழைப்பு

(திருகோணமலை)

யுத்தத்தை நிறுத்தி ஒரு நிலையான மாற்றத்தை, தீர்வைத் தாருங்கள் என தமிழ் மக்கள் அனைவரும் இன்று ஒன்றாக இணைந்து கோரி நிற்கின்றோம்.

இதனை புரிந்து கொண்டு தென் பகுதி சிங்கள மக்கள் ஒன்றிணைந்து நல்ல மாற்றத்தை, தீர்வை தமிழ் மக்களுக்கு வழங்க ஒத்துழைக்க வேண்டும்.

இதனை விடுத்து, குழப்பும் நடவடிக்கையில் ஈடுபடுவதை நிறுத்த வேண்டும்.

இவ்வாறு திருமலையில் இடம் பெற்ற மானுடத்தின் தமிழ் கூடல் 8 வது நாள் நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளா எழிலன் தெரிவித்தார்.

மாகாண கல்வித் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் க.ஆனந்தராஜா தலைமையில் நடைபெற்ற உரையரங்கில், கருத்துரையை இராஜ தர்மராஜா வழங்கினார்.

இங்கு கலந்து கொண்டு தொடர்ந்து உரையாற்றிய எழிலன் குறிப்பிடுகையில்,

இன்றைய மானுடத்தின் தமிழ்க் கூடலினை ஏற்படுத்த இந்த சமாதான சூழல் , காலம் என்பன வழிவகுத்துள்ளன. இந்த மாவட்டத்தைப் பொறுத்தவரை மூவின மக்களும் இணைந்து நடாத்துகிற நிகழ்வாக இது ஏற்படுத்தப்பட்டிருப்பது பாராட்டத் தக்கது.

ஊடகவியலாளர்கள் செய்திகளை வெளிப்படுத்தும் போது அதன் நிலைமையை ஆழமாகப் புரிந்து கொண்டு வெளியிட வேண்டும். மாறாக சுயநலமான தன்மையில், மேலோட்டமாகப் பார்த்து விட்டு செய்திகளை வெளியிடக்கூடாது. அது பெரும் பாதிப்பை ஏற்படுத்தும்.

இன்று ஒரு அமைதிச் சூழல் ஏற்பட்டுள்ளது. யுத்தம் நிறுத்தப் பட்டுள்ளது.இதனை நாங்கள் தான் நிறுத்தியுள்ளோம். இன்று சில கட்சிகள் நாங்கள் இந்த சூழலினை குழப்பமுனைகிறோம் என கூறிவருகின்றன.

முதலில் நாங்கள் தான் யுத்த நிறுத்தத்தை மேற்கொண்டு பேசுவோம். வாருங்கள் என்றோம். மாறாக இதனை உதாசீனம் செய்து முன்னைய அரசு யுத்தத்தை மேற்கொண்டது. அதில் நாம் வெற்றி கண்டோம் இந்த அரசுடனும் முதலில் நாம் தான் யுத்தத்தை நிறுத்தி பேச அழைத்தோம்.

நிலைமை இன்று மாறியுள்ளது. இந்த நிலையில் நாங்கள் இதனைக் குழப்புவது என்பது வேடிக்கையானது.

யுத்த சூழலில் தான் நாம் மடிந்தோம் என்றால் இன்று சமாதான சூழலிலும் எமது போராளிகளை இழந்து கொண்டிருக்கிறோம். ஆனாலும் நிலையான மாற்றத்திற்காக பொறுமை காக்கிறோம். விடுதலைப் புலிகளைப் பொறுத்த வரை சண்டையானாலும் சரி, சமாதானமானாலும சரி மக்களுக்காகச் சாவதற்கு என்றும் தயாராகவுள்ளோம்.

இந்த நிலைப்பாட்டை வைத்துக் கொண்டு அரசு ஒரு சரியான தீர்வைக் காண முன்வர வேண்டும். ஆனால் இதனைப் பலரும் குழப்பவே முயற்சிக்கின்றனர். யுத்தம் அதன் செயற்பாடுகள் அதற்குள் உள்ள பிரச்சினைகள், சிக்கல்கள்,துன்ப, துயரங்கள் என்னவென்பது அதில் ஈடுபட்டவர்கள் என்ற வகையில் எங்களுக்குத் தான் தெரியும்.

எனவே இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஒரு நிலையான மாற்றத்தை, நிலையான தீர்வை ஏற்படுதத சகலரும் தயாராக வேண்டும். தமிழ் மக்கள் ஒன்றிணைந்து இதற்கு தயாராகவுள்ளோம். இதனைப் போன்று நல்ல தீவை வழங்க சிங்கள மக்களும் ஒன்றிணைந்து தயாராக வேண்டும் என்று குறிப்பிட்டார். (உ)

# வெலிகமைப் பகுதியில் ஆயுதங்கள் மீட்பு

(கொழும்பு)

வெலிகமைப் பகுதி வீடொன்றில் இருந்து பொலிஸார் ஆயுதங்களை மீட்டுள்ளனர்.

மேற்படி வீட்டில் இருந்து இரு கைக்குண்டுகள், துப்பாக்கிகள் மற்றும் தோட்டாக்கள்என்பனவே பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

இதுதொடர்பாக 6 பேரை பொலிஸார் கைதுசெய்துள்ளார்.

இவர்களில் இராணுவ வீரர் ஒருவரும் அடங்குகிறார். (உ-8)

## ஸ்ரீ.சு.க.-ஜே.வி.பி.கூட்டு

# புத்தாண்டு தினத்தின்பின் அடுத்த கட்டப் பேச்சு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும், மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையிலான அடுத்தகட்டப் பேச்சுவார்த்தை சித்திரைப் புத்தாண்டு தினத்திற்குப்பின்னர் நடைபெறும் என மக்கள் விடுதலை முன்னணியின் பிரசார செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

இது பற்றி மேலும் கருத்து வெளியிட்ட விமல் வீரவன்ச,

இவ்விரு கட்சிகளும் இணைந்து தேசிய கூட்டமைப்பு ஒன்றை அமைப்பது தொடர்பான முக்கிய கட்டப் பேச்சு வார்த்தைகள் அனைத்தும் இம்மாத இறுதிக்குள் பூர்த்தியடையும்

இக் கூட்டமைப்பு தொடர்பான உடன்படிக்கை எதிர்வரும் மே மாதத்துக்கு முன்னர் கைச்சாத்திடப்படவுள்ளது.

இது சம்பந்தமான முக்கிய கட்டப் பேச்சுவார்த்தைகளை இம்மாத இறுதிக்குள் நடத்தி முடிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார். (உ-8)

# இரு மாடிக் கட்டடத்தை பிரதமர் இன்று திறந்து வைப்பார்

(கொழும்பு)

மலையக மக்களிற்கான முதலாவது இரண்டு மாடிக்கட்டடத் தொகுதி இன்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவினால் திறந்து வைக்கப்படவுள்ளது.

மலையக மக்களின் லயன் வாழ்வுக்கு முடிவு கட்டும் நோக்குடனேயே இம் மாடிக்கட்டடம் அமைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இக்கட்டடத் தொகுதியில் 200 வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன.

பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் தேசிய வீடமைப்பு அதிகாரசபைக்கு விடுத்த பணிப்புரைக்கு அமைய இககட்டடம் அமைக்கப்பட்டுள்ளது. (உ-8)

## பெண் வேடத்தில் கொள்ளையடித்தவர் பிடிபட்டார்

(கொழும்பு)

பெண் வேடமிட்டு, கொழும்பு வெள்ளவத்தை மற்றும் பம்பலப் பிட்டிப் பகுதிகளில் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டு வந்த நபரிடமிருந்து மூன்று இலட்சம் அமெரிக்க டொலர்களையும், 30 பவுண் தங்க ஆபரணங்கள் மற்றும் 6 கையடக்கத் தொலைபேசிகள், 3 தொலைக் காட்சிப் பெட்டிகள், இருபாலாரும் அணியும் ஆடைகள் என்பவற்றை வெள்ளவத்தைப் பொலிஸார் மீட்டுள்ளனர். (உ)

## கால்முறிவு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை துறைமுகத்தில் கப்பலிலிருந்து சீமெந்து இறக்கும் பணியில் ஈடுபட்டிருந்த தொழிலாளி ஒருவர் சீமெந்துப் பொதியுடன் சேர்ந்து விழுந்ததில் இடுப்புப் பகுதியிலும் காலிலும் முறிவு ஏற்பட்டு மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த புதனன்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் வதிரி எரிஞ்ச அம்மன் கோயிலடியைச் சேர்ந்த எட்டுப் பிள்ளைகளின் தந்தையான ஆர்.செல்வராசா (வயது 43) என்பவரே மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவராவார்.(உ-44)

## உவர் நீராகும் அபாயம்

(வேலணை)

வேலணை சாட்டி சிந்தாத்திரை மாதா தேவாலயத்தில் யாத்திரீகர்களின் தேவைக்காக அமைக்கப் பட்ட குடிநீர்க் கிணற்றில் தினமும் பெருமளவு நீர் எடுக்கப்படுவதால் அக்கிணறு உவர்நீராக மாறும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பந்தப்பட்டவர்கள் இது விடயத்தில் அதிக கவனம் செலுத்தி உரிய நடவடிக்கை எடுக்குமாறும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (உ-47)

## சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி நாவலம்பதி காட்டு மலைக்கந்தசுவாமி கோவிலில், புதுவருடப்பிறப்பு நாளான எதிர்வரும் 14ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப 10.30 மணிக்கு ஸகஸ்ர மஹாசங்காபிஷேகம் நடைபெறவுள்ளது.

வள்ளி, தேவயானை சகிதம் முருகபெருமான் வீதி உலாவும் அன்று மாலை இடம்பெறவுள்ளது. (உ)

# கிழக்குப் பல்கலைக்கழக அபிவிருத்தி பற்றி பா.உ.க்கள் பிரதமருடன் பேச்சு

(கொழும்பு)

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் அபிவிருத்தி தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளது.

மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் சகல பாராளுமன்ற உறுப்பினர்களும் இக் குழுவில் அங்கம் பெறுவர் என கிழக்குப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் எம்எஸ்மூக்கையா தெரிவித்துள்ளார்.

இப்பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப் பட்டு 20 ஆண்டுகள் பூர்த்தியடைந்து விட்ட நிலையில் இங்கு அடிப்படை வசதிகள் எவையும் இதுவரை ஏற்படுத்தப்படவில்லை.

இதற்கிடையில், இப்பல்கலைக் கழகத்தின் அபிவிருத்தி தொடர்பாக மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் பல்கலைக்கழக மூதவை உறுப்பினர்கள் கலந்து கொள்ளும் விசேட கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

பிரதி அமைச்சர்களான அப்துல் காதர், பசீர் சேகுதாகு, பாராளுமன்ற உறுப்பினர்களான யோசப் பரராசசிங்கம், கே.தங்கவடிவேல், ஜி.கிருஷ்ண பிள்ளை, எம்.எல்.-ஏ.எம். ஹிஸ்புல்லா மற்றும் பிரதமரின் கொள்கைத் தட்டமிடல் அபிவிருத்தி அமுலாக்கல் அமைச்சு ஆலோசகர் அலுசாகீர் மௌலானா ஆகியோர் இக்கலந்துரையாடலில் பங்கு பற்றி கிழக்குட் பல்கலைக் கழகத்தின் அபிவிருத்தி தொடர்பாக ஆராயவுள்ளனர். (உ-8)

## பரீட்சார்த்திகளுக்கு எழுதுதாள் புத்தகம்

(கொழும்பு)

இம்மாதம் ஆரம்பமாகவுள்ள ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சையின் போது விடைகள் எழுதுவதற்கு வசதியாக முதன் முறையாக பரீட்சார்த்திகளுக்கு எழுதுதாள் அடங்கிய புத்தகம் ஒன்றை அறிமுகப்படுத்திருப்பதாக, பரீட்சை ஆணையாளர் நாயகம் டபிள்யு.ஏ.எம்.விஜயசிறி நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

பரீட்சார்த்திகள் விடைகளை எழுதும் போது நிகழக்கூடிய மோசடிகளைத் தவிர்க்கும் முகமாகவே இந்த நடைமுறை பயன்படுத்தப்படவுள்ளதாகவும் வெளிநாடுகளில் பரீட்சைக்குப் பயன்படுத்துவது போன்று சுமார் 12 பக்கங்கள் கொண்ட எழுதுதாள் புத்தகங்கள் அச்சிடப்பட்டுள்ளதாகவும் பரீட்சைகள் ஆணையாளர் தெரிவித்தார். (வ)

## யாழ். மாநகர சபையின்

# உள்ளூராட்சி வாரம் ஜூலை 14 – 20 வரை

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் ஜூலை 14ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை யாழ். மாநகர சபையினால் உள்ளூராட்சி வாரம் அனுட்டிக்கப்படவுள்ளது.

மக்களின் குறைகளை நிவிர்த்தி செய்தல், சிரமதானப் பணிகள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கான மாநகரசபை தொடர்பான கட்டுரைப போட்டிகள் பேச்சுப் போட்டிகள் உதைபந்தாட்டம் என்பன இக்காலப் பகுதியில் இடம்பெறவுள்ளன.

இறுதி நாளான 20 ஆம் திகதி யாழ். நாவலர் மண்டபத்தில் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பு விழாவும் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன. (உ-7)

## வறுமையால் வாடுவோர்

# வருமானம் ஈட்டும் வகையில் சமூக மேம்பாட்டுத் திட்டம்

(கொழும்பு)

கிராமிய பொருளாதார அமைச்சு, வறுமையால் வாடும் குடும்பங்கள் வருமானம் ஈட்டும் வகையில் சமூக மேம்பாட்டுத் திட்டமொன்றை வகுத்துள்ளது.

இதற்கான நிதி உதவியை வழங்க உலக வங்கி முன்வந்துள்ளது. உலக வங்கியும் அரசாங்கமும் இது தொடர்பான உடன்படிக்கையினை எதிர்வரும் ஜூலை மாதமளவில் கைச்சாத்திடவுள்ளன.

இந்த திட்டத்திற்கென ஒவ்வொரு மாவட்டத்தில் இருந்தும் 10 கிராமங்கள் தெரிவு செய்யப்படவுள்ளன. (உ-8)

## தொழில் இழந்த

# இராணுவ வீரர்கள் உண்ணாவிரதம்

(கொழும்பு)

தொழில் வாய்ப்பை இழந்துள்ள இராணுவவீரர்களின் பிரச்சினைகளை முதலில் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் கவனத்துக்கு கொண்டு வந்த பின்னரே அரசாங்கத்தின் கவனத்துக்கு விடப்படும் என்று எதிர்க் கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ கொழும்புக் கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்னால் உண்ணாவிரதம் இருந்து வரும் முன்னாள் இராணுவ வீரர்களை சந்தித்து உரையாடிய போது தெரிவித்துள்ளார்.

உண்ணாவிரதம் இருந்து வரும் இராணுவ வீரர்கள் மத்தியில் தொடர்ந்தும் உரையாற்றிய மகிந்த ராஜ பக்ஷ,

பொது ஜனஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்திலேயே இராணுவ வீரர்களில் பலர் தொழில் வாய்ப்புக்களை இழக்க நேரிட்டது.

இதனால் அது சம்பந்தப்பட்ட அரசாங்கத்துடனேயே பேச்சுவார்த்தை நடத்தி முடிவு எடுக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

கடந்த நான்கு நாள்களாக தொழில்களை இழந்த இராணுவ வீரர்கள் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்னால் போராட்டம் நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது.(உ-8)

## சங்கே முழங்கு

# வீதிகள் திருத்தம் பெறுமா?

யாழ்.மாநகர சபையின் பின் புறமாக மிக அண்மையில் இருக்கும் கொண்டலடி வீதி, பண்டராக்குளம் வீதி, அரச வீதி, சங்கிலியன் வீதி என்பன மிகநீண்ட காலமாகத் திருத்தப்படாது குன்றும் குழியுமாக காணப்படுகின்றன. இவ்வீதியைத் தினமும் ஏராளமான கல்லூரி மாணவர்களும், மாணவர் சேவை நடத்துகின்ற மினி வான்களும், அரச ஊழியர்களும், நல்லூர் ஆலயத்திற்கு செல்லும் பக்தர்களும் பயன்படுத்துகின்றனர். இவர்கள் இப்பாதையால் பயணம் செய்யும் போது பெரும் இடர்களை சந்திக்கின்றனர்.

கடந்த 48 ஆண்டுகளாக இவ்வீதி திருத்தப்படவில்லையென்றும் இவற்றைச் செப்பனிட்டு தரும்படியும் கொண்டலடி ஞானவைரவர் சனசமூக நிலைய நிர்வாகத்தினரும், பொது மக்களும் கேட்டுக் கொண்ட போதிலும் எந்தவித பலனும் கிட்டவில்லை இதனால் மக்கள் மிக வேதனை அடைந்துள்ளனர். திருத்தம் விரைவில் நடைபெறுமா என மக்கள்அங்கலாய்க்கின்றனர்.

நலன்விரும்பி

### யாழ்ப்பாணம் நீதிமன்றில் நேற்று

# குடாநாட்டில் சட்டம் ஒழுங்கை மீளக் கட்டியெழுப்புவது குறித்த உயர்மட்ட மாநாடு

## உடன் அமுலாகும் விதத்தில் பயன்மிகு தீர்மானங்களை நீதிபதிகள், பொலிஸார் கூடி எடுத்தனர்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் சீர்குலைந்து வரும் சட்டம், ஒழுங்கை மீளக்கட்டியெழுப்புவது மற்றும் சமூக கலாசாரச் சீர்கேடுகளைத் தடுத்து நிறுத்தலும அவற்றை ஒழுங்கமைத்தலும் தொடர்பான உயர்மட்ட மாநாடொன்று நேற்று யாழ். மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் யாழ். மாவட்ட நீதிபதி இ.த. விக்னராசா தலைமையில் இடம் பெற்றது.

பிரதம நீதியரசர் சரத் என். சில்வாவின் பணிப்புரைக்கு அமைய இடம்பெற்ற இந்த உயர் மாநாட்டில் மல்லாகம் மாவட்ட நீதிபதி திருமதி சறோஜினி இளங்கோவன், ஊர்காவற்றுறை மாவட்டநீதிபதி பா. சுப்பிரமணியம், சாவகச்சேரி மாவட்ட நீதிபதி க. அரியநாயம், யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அரல் அன்ரனி, யாழ்பபாணம் பொலிஸ் அத்தியட்சகர் விக்டர் தர்மசிறீ, யாழ்ப்பாணம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் டீ. பிரேமரட்ண மற்றும் குடாநாட்டில் உள்ள சகல பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள், தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரிகள், குற்றத்தடுப்பு பொறுப்பதிகாரிகள், போக்குவரத்து பிரிவு பொறுப்பதிகாரிகள் கலந்து கொண்டனர்.

சடடம், ஒழுங்கை வலுமையாக அமுல்படுத்தி பொதுமக்களை திருப்திப்படுத்தும் வகையில் சட்ட ஆட்சியை வலுமையாக நடைமுறைப்படுத்துவதற்காக உடனடியாக அமுல் படுத்துவதற்கு இம்மாநாட்டில் தீர்மானங்கள் பல எடுக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் குடாநாட்டில் உள்ள பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகளை தமிழில் பதிவுசெய்வதற்கு ஏற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் இவை தற்போது நடைமுறையில் இருப்பதாகவும் பொலிஸார் தரப்பில் இங்கு தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் குடாநாட்டில் உள்ள நீதிமன்றங்களில் பொலிஸாரால் தாக்கல் செய்யப்படும் அறிக்கைகள் பிராது, குற்றப்பத்திரம் தமிழ் மொழியில் சமர்ப்பிக்க ஏதுவாக ஒவ்வொரு பொலிஸ் நிலையங்களிலும் தமிழ் பேசும், எழுதும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தரப்பினரால் தெரிவிக்கப்பட்டது.

தவிர போக்குவரத்துத் தொடர்பான விடயங்களில் பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

✲ போக்குவரத்து விதிகளை மீறுபவர்கள் வாகன அனுமதிப்பத்திரம், வரிப்பத்திரம், காப்புறுதிப்பத்திரம, மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டுதல், அதிவேகத்தில் வாகனம் ஓட்டுதல், விதிமுறைகளைக கவனிக்காது அளவுக்கு அதிகமாக பயணிகளை வாகனத்தில் ஏற்றிச் செல்வது ஆகிய குற்றங்கள் தொடர்பாக போக்குவரத்து பொலிஸாரால் எதிர் காலத்தில் சம்பந்தப்பட்டவர்களை உடனடி யாகக் கைது செய்து நீதிமன்றத்தின் முன் நிறுத்தப் படவேண்டும்.

✲ வீதிகளில் துவிச்சக்கர வண்டிகளிலோ மோட்டார் சைக்கில்களிலோ சமாந்தரமாகப் பிரயாணம் செய்பவர்கள் பொலிஸரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப்படவேண்டும்.

இத்தீர்மானங்கள் தொடர்பாக பொதுமக்களுக்குத்தெரியப்படுத்தி 21-04-2003 முதல் இத்தீர்மானங்களை கடுமையாக நடைமுறைப் படுத்த பொலிஸ் தரப்பினரால் நீதிபதிகளுக்கு உத்தரவாதம் அளிக்கபபட்டதுடன்,

குற்றச்செயல்களில் பாதிக்கப்பட்டவர்களின நலனை எதிர்காலத்தில் முக்கிய கவனத்தில் எடுத்து பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கக்கூடிய வகையில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளுக்கு நீதிமன்றங்களுக்கு பொலிஸ் தரப்பினர் பூரண ஒத்துழைப்பு வழங்குவதெனவும்,

நீதிவான் நீதிமன்றங்களில் பொலிஸாரால் தாக்கல் செய்யப்படும் குற்றச்செயல்கள் சம்பந்தமான வழக்குகள் எதிர்காலத்தில் தேவையற்ற காலதாமதமின்றி விரைவாக நடாத்தி முடிப்பதற்கு பொலிஸார் தரப்பில் விசேட அக்கறை எடுக்கப்பட்டு செயற்படுத்தப்படும் எனவும் உயர்பொலிஸ் அதிகாரிகள் உத்தரவாதம் அளித்தனர்.

இச்சந்தர்ப்பத்தில் நீதிமன்றங்களில் பிறப்பிக்கப்படும் அழைப்புக் கட்டளை, பிடியாணை என்பவற்றை விரைவில் பொலிஸார் செயற்படுத்து வதற்கு ஏதுவாக குடாநாட்டில் உள்ள பொலிஸ் நிலையங்களில மேலதிகமாக வ்ாகனங்கள் விநியோகிக்கப்பட இருப்பதாக உயர் பொலிஸ் அதிகாரியால் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் குடாநாட்டின் நீதிவான்களினால் கட்டளையிடப்படும் மரணவிசாரணையின் ஓர் அங்கமாக முக்கியமாக இருக்கும் பிரேத பரிசோதனை சம்பந்தமாக இறந்தவர்களுடைய உறவினர்களின் நலன்களைக் கருத்திற் கொண்டு சில அவசர நடவடிக்கை எடுப்பதற்காக விரைவில் நீதிவான்கள், உயர்பொலிஸ் அதிகாரிகள், சட்ட வைத்திய அதிகாரிகள் அடங்கிய ஓர் கூட்டம் நடாத்தப்பட உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்திலும் யாழப்பாணம் மேலதிக நீதிவான் நீதிமன்றத்திலும பொலிஸாரால் தாக்கல் செய்யப்படும் வழக்குகளில் கட்சிக்காரர்களுக்கும் சட்டத்தரணிகளுக்கும் பொலிஸாருக்கும் ஏதுவித அசௌகரியங்களும் ஏற்படாது தடுப்பதற்கு 21-04-2003 முதல் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் யாழ்ப்பாணம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்படும் வழக்குகள் திங்கள், புதன் கிழமைகளிலும் கோப்பாய், அச்சுவேலிப் பொலிஸாரால் தாக்கல் செய்யப்படும் வழக்குகள் புதன்கிழமையிலும், யாழ்பபாணம் மேலதிக நீதிவான் நீதிமன்றத்தில் (மேல்மாடியில்) யாழ்ப்பாணம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்படும் வழக்குகள் செவ்வாய்க்கிழமையிலும், கோப்பாய் பொலிஸரால் தாக்கல் செய்யப்படும் வழக்குகள் வியாழக்கிழமையிலும் நடவடிக்கைக்கு எடுத்துக் கொள்வது எனவும் தீர்மானிக்கப்பட்டது. (உ-77-7)

---

### எம் இனச் சிறார்கள் அநீதிக்கெதிராக

# போராடும் தைரியத்தை ஊட்டியது முன்னைய அரசுகளின் மனிதாபிமானமற்ற செயல்களே

## துணை அரசியல் பொறுப்பாளர் தங்கன்

(கிளிநொச்சி)

சமாதான ஒளிக்கீற்று தென்படத் தொடங்கியுள்ள காலம் என்ற வகையில் இப்பொழுதேனும் தாம் குழந்தைகளின் துன்பங்களை நீக்கி அவர்கள் இழந்த குழந்தைப் பருவ வாழ்க்கையை மீளளித்து, நல்ல குடிமக்களாக வளர்வதற்குரிய சூழலை ஏற்படுத்த அர்ப்பணிப்புடன் கூடியுள்ளோம என்பது மனநிறைவையும் ஆறுதலையும் தருகிறது. இந்த உன்னத பணியில் ஈடுபட முன்வந்திருக்கும் எல்லோரையும் குறிப்பாக யுனிசெப் நிறுவனத்தினையும் மனமாரப் பாராட்டுகிறேன்.

கிளிநொச்சி பொருண்மிய மேம்பாட்டுநிறுவன மண்டபத்தில் இடம்பெற்ற யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான ஆய்வுப்பட்டறை ஆரம்ப நிகழ்வில் உரையாற்றிய விடுதலைப் புலிகளின் .துணை அரசியல் பொறுப்பாளர் தங்கன் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்தும் உரை நிகழ்த்திய தங்கன்,

வடக்கு-கிழக்குப் பிரதேசத்தில் வாழும் தமிழ் மக்கள் ஓர் கொடிய யுத்தத்திற்கும் பொருளாதாரத தடைக்கும் போக்குவரத்துத் தடைகளுக்கும் முகம் கொடுத்தவர்கள், யுத்தம் நடக்கும் எந்தப்பிரதேசத்திலுமேயுள்ள இயல்பான விளைவாக, அதுவும் இரண்டு தசாப்தத்திற்கு மேற்பட்ட காலமாகத தொடர்ந்து யுத்தம் நடைபெற்றது என்ற வகையில், குழந்தைகளே பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள், அவர்கள் கல்வியும் வளரும் பருவத்தில் போசாக்கு நிலையும் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டது.

வாழ்வின் எல்லா அம்சங்களிலும் பாரபட்சத்திற்கு முகம்கொடுத்த இக்குழந்தைகள் கண்மூடித்தனமான குண்டு வீச்சுக்கும் வான்தாக்குதல்களுக்கும் தொடர்ச்சியான இடப்பெயர்வுகளுக்கும் ஆளாக நேரிட்டதுடன், பசி பட்டினியை் கண்டார்கள். சீருடையுடன் பாடசாலையில் இருக்கும் பொழுதும், விளையாட்டு மைதானங்களில், விளையாடிக் கொண்டிருந்த பொழுதும், கிராமங்கள் குண்டு வீசசால் தாக்கப்படுமோ என அஞ்சி கோவில்களிலும் தேவாலயங்களிலும் தஞ்சம்புகுந்த வேளைகளிற் கூட, ஈவிரக்கமின்றி கொல்லப்பட்டார்கள்.

ஆயிரக்கணக்கான சிறார்கள் பெற்றோரை இழந்தனர், பலர் தங்கள் தாய்மாரும், சகோதரிகளும், வல்லுறவுக்கு ஆளாக்கப்பட்டு கொல்லப்பட்டதை தம்கண்களாளேயே கண்டனர். பலருக்கு மூத்த சகோதரங்கள் இரவோடு இரவாக காணாமல் போனார்கள். அவர்களின எலும்புகூடுகளே புதைகுழிகளிலருந்து மீட்கப்பட்டன. அவற்றால் ஏற்பட்ட அச்சமும் பீதியும் அவர்களை விரத்திநிலைக்கு தள்ளியது.

இதுவே அவர்களுக்கு அநீதிக்கெதிராக போராடும் தைரியத்தைக் கொடுத்தது எனலாம். போராட வலுவற்ற சிறுவர்கள் தஞ்சம்புக வேறு இடங்களின்றி எங்கள் அமைப்புடன் இணைந்தார்கள். பொறுப்புள்ள ஓர் விடுதலை அமைப்பு என்ற வகையில் இது எங்களுக்கு தரப்பட்ட ஓர் பாரிய பொறுப்பும் சவாலுமாக அமைந்தது. இவர்களைப் பாதுகாத்து நல்ல குடி மக்களாக்கும் பொறுப்பு எங்களுடையதாய் இருந்தது. எதிர்கால சந்ததியின் சுதந்திரத்திற்காக போராட்டத்தை ஆரம்பித்த எமது அமைப்பு எங்களிடமுள்ள மட்டுப்படுத்தப்பட்ட வளங்களுடன் இந்தச் சிறார்களுக்கு பாதுகாப்பும் கல்வியும் வழங்கும் பாரிய பணியை மேற்கொண்டது. இன்றும் தொடர்ந்து செய்து வருகின்றது.

இந்த இடத்தில் முன்னைய அரசு இந்தக் கொடூரமான யுத்தத்தை மிகத் தீவிரமான முறையில் முன்னெடுத்ததை குறிப்பிடுவது பொருததமானது. ஆனால் மிகவும் கவலைக்குரியது என்னவெனில் குழந்தைகளுக்கெதிரான இந்த நடவடிக்கைகளை தடுப்பதற்கு எந்த அமைப்பும் உரிய நேரத்தில் முன்வராது இருந்தமை.

கடந்தகால அரசு நடத்திய பொய்ப்பிரசாரங்களையும் புனைகதைகளையும் பொருட்படுத்தாது, சில உள்ளூர் நிறுவனங்களின் உதவியுடன் எங்கள் அமைப்பு குழந்தைகளின் தேவைகளை ஓரளவிற்கேனும் நிறைவு செய்ய முன்வந்தது. தொடர்ந்தும் செய்துகொண்டே இருக்கிறது. தமிழ்ச் சிறார்கள் பாரபட்சமாக நடத்தப்பட்ட பொழுதும் அவர்களதும் அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டபொழுதும் அவற்றைத்தடுப்பதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால் இங்கே ஒரு யுத்தம் நடந்திருக்காது. இத்தகைய ஓர் பட்டறைக்கான தேவைகூட ஏற்பட்டிருககாது என்றார். (இ)

---

# கள்ளுத்தவறணையை வேறிடம் மாற்றுக!

## முடமாவடி மக்கள் கோரிக்கை

(கொழும்புத்துறை)

ஊர்மனைக்குள் அமைந்துள்ள, நல்லூர் முடமாவடி கள்ளுத்தவறணையை வேறிடத்திற்கு மாற்றுமாறு சம்பந்தப்பட்ட பகுதி மக்கள் பனை தென்னை அபிவிருத்திச்சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேற்படி கள்ளுத்தவறணையில் காலை, மாலை வேளைகளில் கூடுவோர் கூத்து, கும்மாளம், கூச்சல் என அப்பகுதி மக்களின் இயல்பு வாழ்வுக்கு குந்தகம் ஏற்படுத்தி வருகின்றனர்.

அத்துடன், அவர்கள் தகாத வார்த்தைப் பிரயோகம், அடிதடி என்பவற்றிலும் ஈடுபடுகின்றனர்.

இதனால் இப்பகுதிச் சிறுவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, மேற்படி கள்ளுத்தவறணையில் அண்மையில் இடம்பெற்ற கத்திக்குத்துச் சம்பவத்தில் குடும்பஸ்தர் ஒருவர் மரணமானமை குறிப்பிடத்தக்கது. (உ-51)

---

### மின் இணைப்பு

(வேலணை)

வேலணை விஜயரத்தினம் வீதி, சாட்டி செட்டிப்புலம் ஆகிய பகுதிகளுக்கு மின்சாரம் வழங்குவதற்கான நடவடிக்கைகளை இலங்கை மின்சார சபையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

15 வருடங்களின் பின்னர் தற்போது மீண்டும் இப்பகுதிக்கு மின்சாரம் வழங்கப்படவுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-47)

---

### கணனிப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் பரிஷ் லியோக்கழகமும், மானிப்பாயில் இயங்கிவரும் ஐ.எம்.எஸ். கணனி நிறுவனமும் இணைந்து பாடசாலை மாணவர்களுக்கு விடுமுறைகாலத்தில் கணனிப் பயிற்சியை வழங்கவுள்ளன.

இப்பயிற்சி நெறியின் முதலாவது பிரிவு தரம் - 9 மாணவர்களுக்கு எதிர்வரும் 15ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகவுள்ளது. (உ-10)

### போரூட் நிறுவனம் உதவி

(வேலணை)

போரூட் நிறுவனத்தின் நிதியுதவியுடன் வேலணைப் பகுதியில் வசிக்கும் விதவைகள் மற்றும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களுக்கு வீடுகள், குடிநீர்க் கிணறுகள் மற்றும் மலசலகூட வசதிகள் என்பன அமைக்கப்படவுள்ளன.

இதற்கு தகுதியானவர்களிடமிருந்து விபரங்கள் பெறப்பட்டு முதலில் தெரிவு செய்யப்பட்டவர்களிற்கே இவ்உதவி வழங்கப் படவுள்ளது. (உ-47)

### புதிய ஆயர்

(இரத்தினபுரி)

இரத்தினபுரி மறைமாவட்டத்துக்கான புதிய ஆயராக வண.பிதா கெரப் அந்தோனி பெரேரா, கொழும்பு கொட்டாஞ்சேனை லூசியா பேராலயத்தில் பாப்பரசரின் பிரதிநிதி தலைமையில் நடைபெற்ற திருப்பலியில் பொறுப்பேற்றுக் கொண்டார். மார்ச் 22ம் திகதி நடைபெற்ற மேற்படி நிகழ்வில் பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை, பேராயர் ஒஸ்வால்ட் கோமிஸ் ஆண்டகை ஆகியோரும் கலந்து கொண்டு புதிய ஆயருக்கு ஆசீர் வழங்கினர். (உ)

## இன்று ஒரு தகவல்

### ஞாபகம் எப்படிவரும்!

ஒரு நண்பர் யாருக்கோ ஃபோன் பண்ணிக் கொண்டிருந்தார். அவர் பேசிமுடித்ததும் நான் அவரைப் பார்த்து "இப்போது ஃபோன் பண்ணினீர்களே அந்த ஃபோன் நம்பர் என்ன?" என்று கேட்டேன். ஞாபகம் வரவில்லை அவர் தலையைச் சொறிந்து கொண்டார். "சரி சார்! அதை விடுங்கள், உங்கள் மனைவிபெயர் என்ன?" என்று கேட்டேன். "மாலதி" என்றார் "என்ன சார் இது வேடிக்கை! கொஞ்சநேரத்துக்கு முன்பேசிய ஃபோன் நம்பர் மறந்து போயிற்று! எப்போதோ கல்யாணம் பண்ணிக்கொண்ட மனைவியின் பெயர் மறக்கவில்லை. அதைச் சரியாகச் சொல்லிவீட்டீர்களே?" என்றேன்.

அவர் என்னை ஒரு மாதிரியாகப் பார்த்தார். அவர் அப்படி என்னைப் பார்த்ததில் ஒன்றும் தப்பு இல்லை. ஏனென்றால் நாம் எல்லோருமே அப்படித்தானே! ஒரு குறிப்பிட்ட காரியத்திற்காகப் ஃபோன் பண்ணுகிறோம். அதன் பின்னர் அந்த நம்பர் நமக்கு அனாவசியம். அதனால் மறந்து விடுகிறோம். இதற்குப் பெயர் தற்காலிக ஞாபகம். ஆனால் மனைவி பெயரை மறந்து விடமுடியுமா? முடியாது. அது அவசியமான ஒன்று, அடிக்கடி அந்தப் பெயரை உபயோகப்படுத்துகிறோம். அதனாலும் அது முக்கியம் என்பதனாலேயும் அதை மறப்பதில்லை. இதற்குப் பெயர் நிரந்தர ஞாபகம்.

சரி! இந்த தற்காலிக ஞாபகம் நிரந்தர ஞாபகம் ஆகிய இரண்டு ஞாபக அளவுகளையும் கட்டுப்படுத்துவது எது? மூளைக்குள் நடக்கின்ற மின்சார நடவடிக்கைகள் தான். தற்காலிக ஞாபகம் ஒரு மின்னல் மாதிரி தோன்றிமறைகிறது. நிரந்தர ஞாப்கம்" ஒரு படிவம் போல் மூளையில் படிந்து விடுகிறது. ஒரே சம்பவத்தின் பல பிரதிகள் மூளையிலே பல்வேறு பகுதிகளிலும் படிவதனாலே ஒன்று மறைந்தாலும், மறந்தாலும் இன்னொன்று மறைவதில்லை. இப்படிப்பட்ட நிலைமையிலேதான் தொண்டையிலே இருக்கிறது. வாய்க்கு வர மாட்டேன் என்கிறது சார் என்பான்.

ஒருவருக்கு எந்தத்துறையிலே ஆர்வமும் ஈடுபாடும் அதிகமோ அது சம்பந்தமான ஞாபகசக்தி அதிகமாக இருக்கும். தொழிலை விரும்புகிற ஒரு டெலிஃபோன் ஆப்பரேட் டருக்கு எண்கள் எல்லாம் நன்றாக ஞாபகம் இருக்கும், அது மாதிரி கவிஞர்களுக்கு வார்த்தைகள் நன்றாக ஞாபகத்தில் இருக்கும். இது ஒரு பக்கம் இருந்தாலும் ஒரு மூளை எண்களை விட எழுத்துக்களை விட படங்களை மிகவும் சுலபமாக ஞாபகத்தில் வைத்துக் கொள்கின்றது. புரிந்து கொள்கிற தன்மை, அனுபவம், புத்திகூர்மை, இவை கூடிக்குறைவதைப் பொறுத்து ஞாபகசக்தியும் ஏறும், இறங்கும். இப்பொழுது உதாரணத்திற்கு... ஒரு பையனுக்கு படித்தது எதுவும் ஞாபகத்தில் இல்லையென்றால் அவன் அதைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்பது அர்த்தம்.

இந்த .மறதி என்பது எந்தச் சமயத்தில் ஒரு பிரச்சினையாக ஆகின்றது தெரியுமா? உங்களுக்கு வேண்டிய ஒருவரை ஞாயிற்றுக்கிழமை மாலை சரியாக ஐந்து மணிக்கு கடற்கரைக்கு வரச் சொல்லிவிட்டு அந்த நேரத்தை மறந்து விட்டால் அது பரவாயில்லை. வரச் சொன்னதையே மறந்து விட்டாற்றான் நிலைமை மோசம் என்று அர்த்தம். இப்படி இருந்தால் இது சிகிச்சை பெற்றுக் கொள்ள வேண்டிய நிலைமை என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். ஆமாம் இதற்கும் மருந்து இருக்கிறது. ஆனால் மூளை குறிப்பிட்ட அளவுக்கும் கீழே இயங்குகின்றபொழுது நியூரோட்ரான்ஸ் மீட்டர் என்கின்ற மூளை இரசாயனம் மிகவும் குறைந்து போகிற பொழுது மட்டும் தான் உபயோகப்படும்.

மூளையைப் பொறுத்தவரை, அதிலே ஞாபகசக்தி அதிகமாக உள்ள மூளை, மறதியுள்ள மூளை என்று ஒன்றும் கிடை யாது என்று டாக்டர்கள் சொல்கிறார்கள். நினைவு வைத்துக் கொள்வதற்குப் பயிற்சியளிக்கப்பட்ட மூளை, பயிற்சி அற்ற மூளை என்று வேண்டுமானால் சொல்லலாமாம், ஆதலால் நமது ஞாபக சக்தி என்பது நம்மிடம் இருக்கின்ற பயிற்சி- முயற்சி ஆகியவற்றைப் பொறுத்துத் தான் அமையும்

ஒருவர் ஒரு பென்சிலை எங்கேயோ வைத்துவிட்டுத் தேடிக்கொண்டிருந்தார். பின்னர் என்னவோ தீவிரமாக யோசித்து அதை ஞாபகப்படுத்திப் பார்த்துக் கொண்டிருந்தாராம். எதிரிலே உட்கார்ந்திருந்தவர் "பென்சிலைத்தானே தேடிக் கொண்டிருக்கிறீர்கள் அது உங்கள் வலது காதில் இருக்கின்றது சார்!" என்றாராம். இதற்கு அவர் "பென்சிலை வலது காதிலேதான் வைத்திருக் கிறேன் என்பது எனக்கு நன்றாக ஞாபகமிருக்கிறது. ஆனால் எது வலதுகாது என்பது மறந்து போய்விட்டது. அதுதான் யோசித்துக் கொண்டிருக்கிறேன்" என்றாராம்.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# அம்பாறை மாவட்ட முஸ்லிம்களின் காணிகளை ஒப்படைக்க நடவடிக்கை

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம் விவசாயிகளுக்கு சொந்தமான விவசாயக்காணிகளை ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

தமிழ்-முஸ்லிம்மக்களிடையே நல்லுறவை ஏற்படுத்தும் பொருட்டும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும், ஸ்ரீலங்காமுஸ்லிம் காங்கிரஸ கட்சிக்கும் ஜப்பான் பேச்சவார்த்தைகளில் காணப்பட்ட இணக்கப்பாட்டின அடிப்படையிலும் முஸ்லிம் மக்களுக்கு சொந்தமான உடைமைகளை மீளக்கையளிப்பதென தீர்மானிக்கப்பட்டது.

இதன் அடிப்படையில் இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் செயலாளர் நாயகம் ஹசன் அலி தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம் மக்களின் காணிகளை மீளக் கையளிப்பது தொடர்பான இருதரப்பினர்களுக்கும் இடையே நடைபெற்ற கூட்டம் நேற்று அம்பாறை மாவட்டத்திலும் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருவதாக ஹசன் அலி மேலும் தெரிவித்துள்ளார். (உ-8)

# வட-கிழக்கு மாகாண தேவைகள் பற்றிய மதிப்பீடு மக்கள் பார்வைக்கு வெளியீடு

(கொழும்பு)

வடக்குகிழக்கு மாகாணத்தின் தேவைகள் பற்றிய மதிப்பீடுகள் பொதுமக்களின் பார்வைக்கு வெளியிடப்படும் என அரசாங்கம் நேற்று அறிவித்துள்ளது.

பல இன சமூகத்தவர்களினாலும் தயாரிக்கப்பட்ட இம்மதிப்பீட்டுப் பிரதி தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் வறுமை ஒழிப்பு இறுதித்திட்டம் தயாரிக்கப்படும் வேளை இம்மதிப்பீடும் கவனத்தில் கொள்ளப்படவுள்ளது.

எதிர்வரும் ஜுன் மாதம் 25 ஆம் திகதி யப்பான் தலைநகர் ரோக்கியோவில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாடடில் இத்திட்டமும் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இம்மதிப்பீட்டினை பரிசீலனை செய்த பின்னர் அதில் அடங்கியுள்ள பிரேரணைகள் சம்பந்தமாக பொதுமக்கள் தங்களது கருத்துக்களை தெரிவிக்கலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-8)

**புற்றுநோய்ச் சிகிச்சைக் கிராமம்**

# அமைவிடத்தைத் தீர்மானிக்க 15 பேர் கொண்ட உயர் மட்டக் குழு

(தென்மராட்சி)

யாழ்ப்பாணக்குடாநாட்டில் புற்றுநோய்ச்சிகிச்சைக்கிராமம் அமைப்பது தொடர்பான முதலாவது ஆலோசனைக் கூட்டம் நேற்று யாழ். கோவில் வீதியில் உள்ள யு.என்.எச். சீ.ஆர் அலுவலகத்தில் நடைபெற்றது.

யு.என்.எச்.சீ. ஆர் நிறுவனத்தின் வெளிக்கள இணைப்பாளர் செல்வி மொறிஸ் மோகன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான அ. விநாயகமூர்த்தி, எம்.கே. சிவாஜிலிங்கம், ஜீ.ஜீ. கஜேந்திரகுமார், வைத்திய நிபுணர் பேராசிரியர் க. குணானந்தன், டாக்டர் திருமதி சுசில் பெரேரா, டாக்டர் வி. தியாகராசா, டாக்டர் மயிலேறும்பெருமாள், மற்றும் அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளும் பங்குபற்றியிருந்தனர்.

உத்தேச புற்றுநோய் சிகிச்சைக் கிராமத்திற்கான இடத்தினை தெரிவு செய்வதில் பங்குகொண்டவர்கள் மத்தியில் சூடான வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதனையடுத்து குறித்த திட்டம தொடர்பான மேலதிக ஆய்வுகளையும், தொழில் நுட்ப விபரங்களையும் திரட்டும் பொருட்டு 15 பேர் கொண்ட உயர் மட்ட குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

இக்குழுவினர் எதிர்வரு[illegible] 22ம் திகதி கூடி, குறித்த [illegible]தினை தெல்லிப்பழை[illegible] பண்ணையிலா? அல்லது வல்வெட்டித்துறையிலா? அமைப்பது என தீர்மானிக்கப்படவுள்ளது. (உ-77)

## 2042 கண்ணாடிகள் விநியோகம்

(தென்மராட்சி)

வல்வெட்டித்துறை அரசினர் வைத்தியசாலையின் அபிவிருத்திச் சபை சார்பாக இதுவரை 2042 மூக்குக்கண்ணாடிகள் விநியோகிக்கப்பட்டன.

வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழ்கின்றவர்களுக்கே இலவசமாக மூக்குக்கண்ணாடிகள் [illegible]ங்கப்பட்டதாக வைத்திய[illegible]லையின் பொறுப்பதிகாரியான [illegible]க்டர் மயிலேறும் பெருமாள [illegible]ரிவித்தார். (உ-77)

## இராசி பலன்

12.04.2003

(பங்குனி 29, சனி)

தசமி மு.ப 11.20 வரை

ஆயிலியம் பி.ப 2.46 வரை

இராகுகாலம் 9.06 - 10.36

சுபநேரம் 3.06 - 4.36

யோகர் சுவாமி குருபூசை

**மேடம்**
வியாபார மேன்மை, மனச்சோர்வு, காரிய இடையூறு, சொத்துப்பிணக்கு

**இடபம்**
ரோகபயம், அந்நியர் நேசம், கற்பனை மிகுதி, காரிய தாமதம்

**மிதுனம்**
தடைப்பட்ட காரியம் கைகூடும், சகோதரர் உதவி, தனவரவு, தொழில் நன்மை

**கடகம்**
காரிய விவாதம், மனக்கிலேசம், மாதர் நட்பு, பொருள் விரயம்

**சிங்கம்**
புதிய பொருள் சேர்க்கை, நண்பர்கள் உதவி, நல்லமுயற்சி, சயனசுகம்

**கன்னி**
பிதாவழி உறவு, கோபப்படுதல், முயற்சி தாமதம், சுபசெலவு

**துலாம்**
கீர்த்தி, நண்பர்கள் சந்திப்பு, மனமகிழ்ச்சி, முயற்சி கைகூடும்

**விருச்சிகம்**
கடின உழைப்பு, சுபநிகழ்வு, நல்ல செய்தி, பிறர் உதவி

**தனுசு**
ஆன்றோர் மதிப்பு, நிலைக்கேடு, புதிய திட்டங்கள், பிரயாணம்

**மகரம்**
தேகநலன் பாதிப்பு, வீண்தொல்லை, காரிய தடங்கல், போசன சுகம்

**கும்பம்**
களஸ்திர சுகம், பிரயாண நன்மை, பொருள் சேர்க்கை, போசனசுகம்

**மீனம்**
சுகவாழ்வு, காரிய ஜெயம், தொழில் விருத்தி, சத்துரு ஜெயம்

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்.

**தேசிய[illegible]பொலிஸ்**

# ஆ. குழுவுக்கு தெரிவானோர் பதவிகள் இடைநிறுத்தம்

(கொழும்பு)

தேசிய பொலிஸ் ஆணைக் குழுவுக்கு தெரிவு செய்யப்பட்ட அதிகாரிகளின் தற்போதைய பதவிகளை விரைவில் இடை நிறுத்த நடவடிக்கை எடுத்துவருவதாக பொதுநிர்வாக முகாமைத்துவ அமைச்சர் வஜிர அபயவர்த்தனா தெரிவித்துள்ளார்.

கல்வி அமைச்சின் செயலாளருடன நேற்று முன்தினம் நடத்திய பேச்சுவார்த்தையில் இதற்கான இணக்கப்பாடு காணப்பட்டதாக பொது நிர்வாக அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேசிய பொலிஸ் ஆணைக் குழுவுக்கு 2 நிர்வாக அதிகாரிகள் உட்பட 10 அதிகாரிகளை நியமிக்குமாறு பிரதமரின் செயலாளர் பிரடமன் வரக்கோன் எழுத்து மூலமாக கடந்த மாதம் அறிவித்திருந்தார்.

அதன்படி அவர்களுக்கு இப் பதவிகள் வழங்கப்பட்ட போதிலும், அ[illegible]களின் தற்போதைய பதவிக[illegible] புதிய ஒருவரை நியமிப்ப த[illegible]கியோகத்தர் இல்லாதமையா[illegible] டமாற்றங்களை நடைமுறைபபடுத்துவதில் காலதாமதம் ஏற்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார். (உ-8)

**பிரி. ஸ்கிறிப்நெற் அமைப்பு**

# யாழ்ப்பாணத்தவரின் கதையை திரைப்படமாக்கத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

பிரிட்டன் ஸ்கிறிப்நெற் அமைப்பு, யாழ்ப்பாணத்தவர் ஒருவர் எழுதிய கதையைத் திரைப்படமாக்கவுள்ளது.

ஸ்கிறிப்நெற் யாழ். இணைப்பாளராகத் தற்போது கடமையாற்றும் காசிநாதன் ஞானதாஸ் எழுதிய திரைக்கதையே திரைப்படமாக்கப்படவுள்ளது.

தெரிவு செய்யப்பட்டுள்ள மேற்படி திரைக்கதையை வெப்தளத்தில் பார்ப்பதற்கும் வசதி செய்யப்பட்டுள்ளது.

பிரிட்டன் ஸ்கிறிப் நெற் அமைப்பு கடந்த ஆண்டு நாடளாவிய ரீதியில் நடத்திய திரைக் கதை உருவாக்கல் பயிற்சி முகாமின் மூன்றாம் சுற்றுக்கு 12 பேர் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

மூன்றாம் சுற்றில் பங்கேற்ற 12 திரைக் கதைகளில் 5 மாத்திரம திரைப்படமாக்குவதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளதும்,

பெரும்பான்மை இனத்தவர் மூவரதும் முஸ்லிம் இனத்தவர் ஒருவரதும் திரைக்கதைகள் அடங்குகின்றதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு தயாரிக்கப்படும் மேற்படி திரைப்படங்கள் சர்வதேச திரைப்பட விழாவில் இடம்பெறவிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (உ)

உள்ளத்தால் பொய்யாதொழுகின் உலகத்தார்
உள்ளத்து ளெல்லாம் உளன்
—குறள்—

# வலம்புரி

## பொருத்தமற்ற முறை

இலங்கை இனப்பிரச்சினை விவகாரம் முன்னர் யுத்தம் என்ற அடிப்படையில் நீண்டு சென்றது. இப்போது சமாதானப் பேச்சு என்ற வகையில் காலம் கடத்தப்படுகிறது. தீர்வுத் திட்டங்கள் எதுவும் இது வரை முன்வைக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

ஏதோ வெளிநாடுகளிடமிருந்து நிதியுதவியைப் பெறுவதுதான் இலக்கு என்ற அடிப்படையில் சமாதானப் பேச்சுக்கள் இழுத்தடிக்கப்படுகின்றன. இத்தகைய இழுத்தடிப்புக்கள் சிறுபான்மையினரான தமிழ் மக்களுக்கே பெரும் பாதிப்பை ஏற்படுத்தும்.

உரிமைக்காகப் போராடிய ஓர் இனம் தனது போராட்டத்தை ஒத்தி வைத்துவிட்டு சமாதான வழியில் அரசுடன் பேச்சுக்கள் நடத்தும் போது பிரச்சினைக்கான தீர்வுத் திட்டம் உடனடியாக அமுல்ப்படுத்தப்படவேண்டும். அவ்வாறு இல்லாமல் படிப்படியாக முன்னேற்றம் காண்பதென்பது விடுதலைப் புலிகளின் பலத்தை - அவர்களின் யுத்த உபாயங்களை பலவீனப் படுத்துவதற்கான வழியாகும். சமாதானப் பேச்சுக்களில் மக்களின் இயல்பு நிலைகுறித்து பேசுவது அவசியமெனினும், அதனோடு சேர்ந்து சமகாலத்திலேயே தீர்வுத் திட்டத்தினையும் முன்வைப்பது அவசியமாகும்.

பேச்சுவார்த்தையை ஆரம்பித்து விட்டு தீர்வுத் திட்டத்தைத் தேடுவது விசித்திரமானதோர் செயற்பாடாகும். உண்மையில், தமிழ் மக்களின் உரிமையை உறுதிப்படுத்தக்கூடிய தீர்வுத் திட்டத்தை அரசும், விடுதலைப் புலிகளும் முன்வைக்க வேண்டும். இரு தரப்பாலும் முன்வைக்கப்படுகின்ற தீர்வுத் திட்டம் பற்றி இருதரப்பும் பேச்சுவார்த்தையில் ஆராய்ந்து நீக்குவதை நீக்கி, சேர்ப்பதைச் சேர்த்து ஓர் பொதுவான திர்வுத் திட்டத்தை உருவாக்க வேண்டும். அத்தகையதொரு தீர்வுத் திட்டம் வடக்குக் கிழக்கில் குடிகொண்டுள்ள இராணுவத்தின் அகல்வுக்கும், இடம் பெயர்ந்த மக்களின் மீள் குடியமர்வுக்கும் வழிவகுக்கும். அதன் போது இயல்பு வாழ்க்கை இயல்பாகவே ஏற்படும். இதனை விடுத்து இராணுவம் குடிமனைகளைச் சுற்றி இருக்கும் போது இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்த முடியாது.

அதே வேளை வெளிநாடுகளுக்குச் சென்று அந்நாடுகளின் அரசியல் யாப்புகளை அறிந்து வந்து தீர்வு காண்பதென்பதும் நடைமுறைக்கு ஒவ்வாது. இது பாடசாலையைக் கட்டி வகுப்பறைகளில் மாணவர்களை இருத்திவிட்டு அதன் பின்னர் பாடத்திட்டம் தயாரிப்பதற்காக பொருத்தமான நாடுகளிற்குச் சென்று அங்குள்ள கல்வி முறைகளை ஆராய்வதற்கு ஒப்பானதாகும்

# மிகப்பெரும் தேச விரோத சக்தியாக தற்போதைய அரசாங்கம் மாறி வருகிறது

## ஜே.வி.பி பிரசார செயலாளர் கண்டனம்




(கொழும்பு)

இலங்கை மக்களின் நாடி பிடித்துப் பார்த்து அவர்களின் தேவையை அறிந்து சேவை செய்யும் அமைச்சர் எவருமே இப்போது இல்லை. நாட்டின் தலைவிதி மக்களை கேட்டு நிர்ணயிக்கப்படுவதும் இல்லை. அபிப்பிராய வாக்கெடுப்பு எனக் கூறப்படுவதெல்லாம் வெறும் பூச்சாண்டி,

இவ்வாறு தெரிவித்துள்ளார் ஜே.வி.பி யின் பிரசார செயலாளர் விமல் வீரவன்ச.

மாத்தளை மாநகர சபை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்,

சண்டையுடன் கூடிய யுத்த நிறுத் தம் தான் இப்போது நடைமுறையில் உள்ளது என்ற உண்மையை பிரதமர் ரணிலால் ஒரு போதும் மறுக்க முடியாது.

இந்நிலையில், யுத்த நிறுத்த ஒப்பந்தத்திற்குப் பிறகு வடக்கில் இருந்து இங்கு பிணங்கள் வருவது இல்லை என பிரதமர் ரணில் கூறுகிறார். அதற்கிடையில் பிணத்துக்குக் கூட இராணுவ மரியாதை கொடுக்க ரணிலின் அரசு மறுத்த சம்பவம் அண்மையில் மாத்தளையில் நடந்துள்ளமையினை பெரும்பான்மை மக்கள் அறிவார்கள்.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்திற்கு எதிராகவே புலிகள் நடந்து வருகின்றனர். இதற்கு தேவையான தளத்தை நேர்வே அரசு செய்து கொடுத்து வருகின்றது. அதனை அரசாங்கம் கண்டும் காணாமலும் இருந்து வருகிறது.

குறிப்பாகச் சொல்லப் போனால் அரசாங்கமே மிகப்பெரிய தேச விரோத சக்தியாக மாறி வருகிறது. தனது தேசவிரோத நடவடிக்கைகளுக்கு ஏனைய சக்திகளையும் கட்டியணைத்துக் கொண்டு செயற்பட்டு வருவதோடு மக்களின் கண்களில் மண்ணைத்தூவும் விதத்தில் மிகவும் கவர்ச்சிகரமாக செய்தி ஊடகங்களையும் அரசு பயன்படுத்தி வருகின்றது.

உலகில் 34 நாடுகளில் தமிழர்கள் வாழ்கின்றார்கள். ஆனால் எந்த நாட்டிலும் அவர்களின் இனத்தைச் சுட்டிக்காட்ட ஒரு தேசிய கொடி கூட கிடையாது.

இந்நிலையில் சமஷ்டி முறையை இலங்கையில் ஏற்படுத்தி நமது தேசியக் கொடியிலும் தேசிய கீதத்திலும் அவர்கள் கைவைக்க திட்டமிடுவதை நாம் ஒருபோதும் அனுமதிக்கப்போவதில்லை.

இன்று புலிகள் தமக்காகத் தனியான ஒரு அரசை அமைத்துக் கொண்டிருப்பதை முழு உலகமுமே அவதானித்துக் கொண்டிருக்கிறது.

அந்த அரசின் பிரதிநிதியாகத்தான் புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் சகல பேச்சு வார்த்தைகளிலும் கலந்து கொண்டு வருகிறார்.

சமஷ்டி என்ற பெயரில் உலக நாடுகளுக்கெல்லாம் சவாரி செய்து வரும் புலிகள் தமது தனி அரசிற்கு ஆதரவு திரட்டுவதில்தான் அக்கறை காட்டுகிறார்கள். அத்துடன் தமது சர்வதேச தொடர்புகளை நிலை நிறுத்தவும் தமது வெளிநாட்டுப் பயணங்களை சாதகமாக்கிக் கொள் கிறார்கள்.

அதேசமயம், இன்று நாட்டில் எரியும் பிரச்சினையாக உருவாகியிருக்கும் தனிநாட்டுக் கோரிக்கை விடயத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்றுமில்லாத வகையில் புது முறையில் செயற்பட ஆரம்பித்துள்ளது என்று குற்றம் சாட்டியுள்ளார். (உ-10)

## பூகோள மயமாக்கலின் எதிரொலி

# 60 சதவீதமான 5 வயதுக்குழந்தைகள் போஷாக்கின்மையால் வாட்டம்

## கியூடெக் நிறைவேற்றுப் பணிப்பாளர் தகவல்

(தென்மராட்சி)

பூகோள மயமாக்கல் என்பது ஒரு பிரகடனப்படுத்தப்படாத போர். இப்போர் எம் மத்தியில் பல்வேறு விதமான விளைவுகளை ஏற்படுத்தி வருகின்றது. எனவே எமது சமுதாயத்தின் எதிர்கால நன்மை கருதி நாம் இப்பிரகடனப்படுத்தப்படாத போர் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

கியூடெக் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளரான வண.பிதா சீ.ஜீ.ஜெயக்குமார் அடிகள் கடந்த வியாழனன்று மனித முன்னேற்ற நடுநிலையத்தில் நடைபெற்ற "பூகோள மயமாதல் மூன்றாம் உலகப் பார்வை" எனும் நூல் வெளியீட்டு விழாவில் தலைமை வகித்து உரையாற்றும் போது தெரிவித்தார்.

இவ்விழாவில் மறைமாவட்ட குரு முதல்வர் வண.பிதா ஜே.பீ.ஈ.செல்வராஜா அடிகள் ஆசியுரையை நிகழ்த்தினார்.

வண.பிதா சீ.ஜீ. ஜெயக்குமார் அடிகள் அங்கு தொடர்ந்து குறிப்பிடுகையில்,

பூகோள மயமாக்கல நேற்று இன்று தொடங்கியதொன்றல்ல. என்றைக்கு மனித வரலாறு ஆரம்பித்ததோ அன்றைக்கே இந்தப் பூகோள மயமாக்கல் ஆரம்பிக்கப்பட்டு விட்டது. இதன் காரணமாக அரசியல், மதம் மற்றும் கலாசாரமும் கூட பூகோளமயமாக்கப்பட்டு விட்டன.

இப்பொழுது நாம் பேசுகின்ற பூகோள மயமாக்கல் கிட்டத்தட்ட 70களில் கொண்டு வரப்பட்டதாகும். பூகோள மயமாக்கல் என்பது பொருளாதார அமைப்பையே சுட்டிக்காட்டி நிற்கின்றது. சர்வதேச நாடுகள் தங்கள் தேசிய பொருளாதாரத்தை உலக சந்தைவரை எடுத்துச செல்வது தான் இந்தப் பூகோளமயமாக்கல்.

யூனிசெவ் நிறுவனத்தின் அறிக்கையின் படி, எமது நாட்டில் சுமார் 60 சதவீதமான ஐந்து வயதுக் குழந்தைகள் போசாக்கின்மையால் வாடுகின்றனர். இது பூகோளமயமாக்கலின் பின் விளைவுகளில் ஒன்றாகும். அது மட்டுமல்லாமல் கடந்த 5 ஆண்டுகளில் எமது நாட்டில் 70 ஆயிரம் பேர் தற்கொலை செய்துள்ளனர் .இந்த வகையில் பூகோளமயமாக்கல் எம் மத்தியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றது.

மேலும் எமது பிரதேசத்தில் வாழ்கின்ற விவசாயிகள் கூட தமது உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்ய முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டமைக்கும் இதுவே மூல காரணமாகும் என்றார்.

நூல் பற்றிய ஆய்வுரையை யாழ். பல்கலைக்கழக பொருளியல் துறைத் தலைவர் வி.பி சிவநாதன் ஆற்றினார்.நூலின் முதலாவது பிரதியை யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் டாக்டர் வி.தியாகராசா பெற்றுக் கொண்டார்.

நூலாசிரியர் வண.பிதா பிகிருபானந்தன் ஏற்புரைநிகழ்த்தினார்.(உ-77)

## மீனவர் தாக்கப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

வியாபாரிமூலையைச் சேர்ந்த மீனவர் ஒருவர் நேற்று முன்தினம் கரையோர காவல் பணியில் ஈடுபட்டிருந்த படையினரால் தாக்கப் பட்டார்.

நேற்று முன்தினம் வியாபாரி மூலைப் பகுதியில் வைத்து செ.செல்வராசா என்பவரே தாக்கப்பட்டவராவார்.

மேற்படி மீனவர் தனது படகை நிறுத்துவதற்கு ஒதுக்கப்பட்ட இடத்தினைத் தவிர்த்து வேறோர் இடத்தில் படகை நிறுத்தியதாலேயே தாக்குதலுக்கு உள்ளானார் எனத் தெரியவருகின்றது. (உ)

## உரிமத்தகடு விநியோகம்

(நெல்லியடி)

கரவெட்டி பிரதேச சபைக்கு உட்பட்ட அனைத்து துவிச்சக்கர வண்டிகளுக்குமான உரிமத் தகடு கரவெட்டிப் பிரதேச சபையினால் விநியோகிக்கப்படுகிறது.(உ-44)

# யு.எஸ்.எயிட் குழு இணையத்திற்கு விஜயம்

(தென்மராட்சி)

யு.எஸ்.எயிட் நிறுவனத்தின் விசேட திட்ட அலுவலர் மைக்கல் ஜே.டிஸ்சிஸ்றி தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்துக்கு வருகைதந்திருந்தனர்.

இக்குழுவினர் இணையப் பிரதிநிதிகளுடன் யாழ். குடாநாட்டில் அதியுயா பாதுகாப்புவலயம், மக்களின் குடியிருப்பு, சுகாதாரம், வேலைவாய்ப்பு, போசாக்கின்மை, பெண்உரிமைகள் போன்றவிடயங்கள் தொடர்பான நிலைமைகளை விரிவாகக் கேட்டறிந்து கொண்டனர்.

இருபது வருடகால யுத்தத்தின் காரணமாக குடாநாட்டு மக்கள் அனுபவித்துவரும் துன்பங்கள், துயரங்கள் பற்றி இணையப் பிரதிநிதிகள் இக்குழுவினரிடம் எடுத்துக் கூறியிருந்தனர். (உ-77)

## கொலைஞர் கைக்குண்டுடன் கைது

(கொழும்பு)

கொள்ளை மற்றும் கொலைச் சம்பவங்களில் ஈடுபட்டு வந்த நபர் ஒருவரை கல்கிசைப் பொலிஸார் நேற்றுக் கைக்குண்டுடன் கைது செய்துள்ளனர்.

பல்வேறு குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில்20 இற்கும் மேற்பட்ட நீதிமன்றங்களினால் இந்நபர் மீது பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டிருந்ததும், கடந்த 6 மாத காலமாக பொலிஸார் இவரைத் தேடி வலை விரித்து வந்தனர் எனவும் கல்கிசைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அத்துகோறளை தெரிவித்துள்ளார். (உ-8)

## தினசரி தியானம்

### நாவடக்கம்

நாக்கு இருபுறமும் கூராக உள்ள கத்தி போன்றது. மிக வலிமை வாய்ந்தது. இதை அடக்கி விட்டால் மற்ற எல்லா உறுப்புக்களையும் அடக்கி விடலாம். எல்லாப் புலன்களிலும் நாக்குத் தான் கட்டுப்படுத்த முடியாதது. சக்தி வாய்ந்தது.சொற்கள் அற்புதமான சக்தி உடையவை. உங்களது சொற்களால் பிறரை உற்சாகப்படுத்தலாம். மகிழ்ச்சியில் ஆழ்த்தலாம். இன் சொற்களால் பிறரது உள்ளங்களைக் கவரலாம். இறைவனைப் பற்றித் தெரிவிப்பது சொல்லே ஆகும். தியானத்தில் விரைவான முன்னேற்றம் தேவை எனில் இனிமையான சொற்களையே பேசிப் பழகுங்கள்.

சுவாமி சிவானந்தர்

## தவக்கால நற்சிந்தனை

"ஆயர் தம் மந்தையைக் காப்பது போல் அதைக் காப்பார்"

இறந்த இலாஸருக்கு உயிரைத் தந்தவரின் உயிரை எடுப்பதற்கு இருண்ட மனங்கள் திட்டம் தீட்டுகின்றன. இனத்துக்காக ஒரு மனிதனை இழப்பது தவறல்ல. வேதாளம் கூட ஞானம் பேசும் என்பதற்கு தலைமைக் குருவின் இச் சொற்றொடர் எடுத்துக் காட்டு. நிறுவனமே முக்கியம். நிறுவனத்தின் நன்மைக்காக தனி மனிதனை இழப்பது தவறல்ல என்று சில நேரங்களில் நம் தவறான முடிவுகளுக்கு நியாயம் கற்பிப்பது இல்லையா? நம் செயல்களும், வார்த்தைகளும் நமது மனதின் ஒத்திகையை வெளிப்படுத்துபவை. எனவே உள்ளத்தின் ஆழத்தில் அவை உருவாகும் நோக்கத்தை உபசரிப்பது அவசியம்.

காவலன்

### இலங்கையின்...

வருகின்றபோதிலும் இலங்கையில சமாதான நடவடிக்கைகள் தொடர்பாகவும் நிதியுதவி மாநாடு தொடர்பாகவும் சர்வதேச சமூகம் அக்கறை செலுத்தி வருவதாகவும் ஆம்டேஜ் மேலும் தெரிவித்துள்ளார்.

இச் சந்திப்பின் போது இலங்கையின் தற்போதைய சமாதான நடவடிக்கையின் நிலைமை குறித்து அமைச்சர் மிலிந்த, ஆம்டேயுக்கு தெளிவாகவிளக்கிக கூறியுள்ளார்.

அத்துடன் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் டோக்கியோ மாநாட்டுக்கு முன்பதாக வாஷிங்டன் மாநாடு குறித்தும் இச் சந்திப்பில் ஆராயப்பட்டுள்ளது.

வாஷிங்டன் மாநாடு நாளை மறுதினம் இடம் பெறவுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இச் சந்திப்பில் வாஷிங்டனில் உள்ள இலங்கைத் தூதுவர் தெய்வேந்திரா சுபசிங்காவும் கலந்து கொண்டார்.(இ-3)

### யுத்த நிறுத்த..

டமும் அரசிடமும் ஏற்கனவே சமர் ப்பிக்கப்பட்டிருந்தன.

இந்த அறிக்கை தொடர்பாகவே இலங்கை அரசு தனது சிபார்சுகளையும்,விதப்புரைகளையும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு சமர்ப்பித்துள்ளது.

இதேவேளை விடுதலைப் புலிகளும் தமது சிபார்சுகளையும், விதப்புரைகளையும் விரைவில் சமர்ப்பிக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம)

### கடத்தப்பட்டவர்கள்..

முஸ்லிம் தமிழ் சமூகத்தவர்களிடையே கைகலப்பு இடம் பெற்றதுடன் ,வன்முறைச் சம்பவங்களும் இடம் பெற்று வந்தன,

இந் நிலையில் நேற்று மூதூர்ப் பொலிஸார் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது கடத்தப்பட்டு காணாமல் போனவர்கள் அனைவரும் மீட்கப்பட்டுள்ளனர். (இ)

### இலங்கை இன...

சமாதான முயற்சிகள் சம்பந்தமாக அவர் தெரிவித்திருந்த கருத்துக்கள் தொடர்பாக பி.பி.ஸி செய்தியாளர் கேட்டபோதே முன்னாள் இந்தியப் பிரதமர் ஐ.கே.குஜ்ரால் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுடனாக சந்திப்பினை அடுத்தே அவரது நிலைப்பாடு குறித்து பி.பி.ஸி செய்தியாளரிடம் கருத்து தெரிவித்த குஜ்ரால் நோர்வேயின் அனுசரணையுடன் இலங்கை அரசு விடுதலைப் புலிகளுடன் நடத்திவரும் சமாதானப் பேச்சுக்களில் இந்தியா ஆர்வம் காட்ட வேண்டும் என்று ஜனாதிபதி சந்திரிகா எம்மிடம் வற்புறுத்திக் கேட்டுக கொண்டதுடன் முன்னாள் இந்தியப்பிரதமர் ராஜீவ் காந்தியின் படுகொலைக்குப் பின்பு இலங்கையின் உள் விவகாரங்களில் தலையிடாமல் இருப்பது என்ற நிலைப்பாட்டை இந்தியா மாற்றிக் கொள்ள வேண்டும்.

இலங்கையில் என்ன நடந்தாலும் பரவாயில்லை,கவலையில்லை என்ற நிலைப்பாட்டை இந்தியா தொடர்ந்தும் கடைப்பிடிக்கக் கூடாது.இலங்கையின் விவகாரங்களில் வெளிப்பிராந்திய சக்திகள் தலையிடும் போது இந்தியா தனது சொந்த நலன்களை கருத்திற் கொண்டாவது இலங் கையின் விவகாரத்தில் தலையிட வேண்டும் என்றும் ஜனாதிபதி சந்திரிகா வற்புறுத்திக் கேட்டுள்ளார் என்றும் குஜ்ரால் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்தியப் பிராந்தியத்தைச் சாராத வெளிநாடுகள் அதிக அளவில் ஆர்வம் காட்டுவதையும் அத்தகைய நாடுகளின் எண்ணிக்கை அதிகரித்துவரும் போக்கையும் ஜனாதிபதி சந்திரிகா எம்மிடம் விளக்கிக் கூறியதுடன் இந்தியா எவ்வகையிலும் தலையிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

இலங்கையின் சமாதான முயற்சிகளில் வெளி சக்திகள் தலையிடுவது பற்றி அவர் எவ்வித கவலையும வெளியிடவில்லை.அவர் சமாதான முயற்சிகளை ஆதரித்து வருகிறார். ஆனால் இலங்கை இனப்பிரச்சினையில் வேறு சக்திகள் தலையிடுவதிலும் பார்க்க இந்தியா மேலதிகமாக தலையிட வேண்டும் என்பதையே அவர் விரும்புகிறார் என்றார்.

விடுதலைப் புலிகள் தரப்பில் பழைய சம்பவங்களை மறக்குமாறு அடிக்கடி கோரிக்கை விடப்படுவது தொடர்பாக குஜ்ரால் கருத்துத் தெரிவிக்கையில; இலங்கையில் இனப்பிரச்சினைத் தீர்வு ஏற்பட்ட பின்பு தான் புலிகளின் இக் கோரிக்கை பற்றி பதிலளிக்க முடியும். அதற்கு முன் இது தொடர்பாக பேசமுடியாது. விடுதலைப் புலிகள் ஒன்றுபட்ட இலங்கைக்குள் அமைதியான தீர்வுக்கு வந்து அதனை நடைமுறைப்படுத்துவதன் மூலம் தம்மீதான நம்பிக்கையை பலப்படுத்திக் கொள்ளலாம் என்றும் முன்னாள் இந்தியப்பிரதமர் ஐ.கே.குஜ்ரால் தெரிவித்தார்.

(ம)

### ஈ.பி.டி.பி..

கைது செய்யப்படடு அங்கிருந்து தப்பி வந்தவரென அறிமுகப்படுத்தப்பட்ட ஈ.பி.டி.பி உறுப்பினர் எஸ். பரமன் தனக்கு ஏற்பட்ட நிலைமை குறித்து பத்திரிகையாளர்களுக்கு விபரிக்கையில்,

வன்னியிலுள்ள எனது உறவினர் வீட்டுக்கு சென்ற போதே என்னை முருகண்டியில் வைத்து விடுதலைப் புலிகள் கைது செய்தனர்.அதன் பின்னர் என்னை அடைத்து வைத்து சித்திரவதை செய்தனர்.

அவர்களின் பிடியில் இருந்து புளொட் உறுப்பினர் ஒருவரின் உதவியுடன் தப்பி கிளிநொச்சியிலுள்ள போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் பாதுகாப்புக் கோரி தஞ்சமடைந்தேன்.

எனது நிலைமையை அவர்களுக்கு விளங்கப்படுத்தினேன் அவர்கள் என்னை யாழ். பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

பொலிஸார் மூலம் மீண்டும் எமது அமைப்போடு இணைந்து கொண்டேன் என்றும் தெரிவித்தார். (இ)


## மாபெரும் மலிவு விற்பனை

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு

இம் மலிவு விற்பனை ஈஸ்ரர் பண்டிகை (20-04-2003) வரை நீடிக்கப்பட்டுள்ளது

சகல வகையான புடைவைகளையும் விசேட விலைக்கழிவில் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்

**லைடன் புடைவை நிலையம்**

410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் T.P: 222 2381

[C/5985]



**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை**

**வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகு**

## அறிவித்தல்

**வணிகமுதற் தேர்வு - 2001 - துணைப்பாடங்கள்**

மேற்படி வணிக முதற்தேர்வுக்கான கீழ்வரும் துணைப் பாடங்கள் (**Ancillary Subjects**) 05.05.2003 தொடக்கம் ஆரம்பமாகவுள்ள கலை முதற்தேர்வு - 2001 உடன் இணைந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெறும் என்புதை அறியத்தருகின்றேன். நேரஅட்டவணையை அலுவலக நேரத்தில் 22.04.2003 முதல் யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் பெற்றுக்கொள்ளலாம்

01. EX.BM.1.0 அடிப்படைக் கணிதம்
02. EX.CS. 1.0 தொடர்பாடல் கற்கைகள்
03. EX.LS. 1.0 அளவையியலும் விஞ்ஞான முறைமையும்

பதிவாளர்

[C/5986]



**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை**

**வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகு**

## வெளிவாரிப் பரீட்சை

**1.கலை முதற்தேர்வு - 2001**

மேற்படி பரீட்சை 05.05.2003 தொடக்கம் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலும், வவுனியா வளாகத்திலும் ஆரம்பமாகின்றன. நேர அட்டவணைகளையும் பரீட்சை அனுமதி அட்டைகளையும் அலுவலக நேரத்தில் 22.04.2003 முதல் யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகிலும், வவுனியா வளாகத்திலும் பெற்றுக் கொள்ளலாம்

மேலதிக விபரங்களுக்கு 021-222 3612 (யாழ்ப்பாணம்), 024-22265 (வவுனியா) என்ற தொலைபேசி எண்களுடன் தொடர்பு கொள்ளலாம்

பதிவாளர்

[C/5987]



## இலங்கை வங்கி

மலரும் புத்தாண்டில் சகலருக்கும் மங்களமும் சுபீட்சமும் உண்டாகுக!

புத்தாண்டு தினமான 14.03.2003 திங்கட்கிழமை

புதுவருடக் கொடுக்கல் வாங்கல்களுக்காக

எமது சகல கிளைகளும்

பி.ப. 3.00 மணியிலிருந்து பி.ப. 5.00 மணிவரை

திறந்திருக்கும் என சகலருக்கும் அறியத்தருகின்றோம்



## கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவனத்தின் பதிவாளரும் கணனிப் பிரிவு

இயக்குநருமாகிய **சுரேஸ்குமார்** அவர்களின்

அன்புத் தந்தையார்

## அன்றைய எமது விசேட சேவைகள்

- புத்தாண்டு தினத்தன்று பணம் வைப்புச் செய்யும் அனைவருக்கும் கைவிசேடம் வழங்கப்படும்
- அன்றைய தினம் சேமிப்புக் கணக்குகள், 18+ மற்றும் மூத்த குடிமக்களுக்கான கணக்குகள் உட்பட சகல வைப்புகளும் ஆரம்பிக்கப்படும்
- ரூ 2500/= அல்லது அதற்கு மேற்பட்ட தொகையை சேமிப்புக் கணக்கில் வைப்புச் செய்பவர்களுக்கு விசேடபரிசுச் சீட்டிழுப்பு மூலம் பரிசுகள் வழங்கப்படும்
- ஏப்பிரல் 14 முதல் மே 13 வரை ஆரம்பிக்கப்படும் சகல நிலையான வைப்புகளுக்கும் அதிக வட்டி வழங்கப்படும்

மேலும் வாடிக்கையாளரின் நலன் கருதி புத்தாண்டுக்கு முன்தினமான 13.04.2003 ஞாயிற்றுக்கிழமை கீழ்க்கண்ட எமது கிளைகள் மு.ப. 8.30 மணி முதல் நண்பகல் 12.30 மணிவரை திறந்திருக்கும்

- யாழ். மேற்றரக்கிளை
- பருத்தித்துறைக் கிளை
- சுன்னாகம் கிளை

**உயர்விலும் தாழ்விலும்**
**உங்கள் உற்ற நண்பன்**

[C/5988]



## "சிவசுப்பிரமணியம்"

அவர்கள் காலமானதை அறிந்து துயரமடைகின்றோம்
அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை
பிரார்த்திக்கின்றோம்

நிர்வாகத்தினரும்
மாணவர்களும்

**JAFFNA TECHNICAL INSTITUTE,**
11/10B Stanley Road,
Jaffna.

T.P-222 3335

[C/5989]



## உடன் தேவை

- கணனி பக்க அமைப்பாளர்கள் (ஆண், பெண் இருபாலாரும்)
- பத்திரிகை விநியோகஸ்தர்கள் (சொந்தமாக மோட்டார் சைக்கிள் வைத்திருப்பவர்கள்)

சுயமாகத் தயாரித்த சுயவிபரம் அடங்கிய விண்ணப்பத்துடன் நேரில் வரவும்.

வலம்புரி ஆளணி முகாமையாளர்


இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.04.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.